யாழ்ப்பாணம்
நல்லூர் பொது நூலகம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 21 செவ்வாய்க்கிழமை (04-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 97

# நுவரெலியாவில் சந்திரிகா தங்கிய இல்லத்துக்கு அருகே குண்டுவெடிப்பு

## ஒருவர் பலி; இருவர் கைது

கொழும்பு, மார்ச் 4

**நுவரெலியாவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தங்கி இருந்த -- அவரின் உத்தியோகபூர்வ -- வாசஸ்தலத்துக்கு வெளியே நேற்றுப் பிற்பகல் 2-30 மணியளவில் குண்டு ஒன்று வெடித்தது. இக் குண்டு வெடிப்பில் இளைஞர் ஒருவர் பலியானார்; குண்டு வெடிப்புத் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டனர்.**

நுவரெலியா பட்டினசபை மைதானத்தில் நேற்றுப் பிற்கல் 3.00மணிக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் உள்ளூராட்சித் தேர்தல்பிரசாரக் கூட்டம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றுவதற்காக நுவரெலியாவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி, அங்கு தமது உத்தியோக பூர்வ இல்லமான — கோடைகால வாசஸ் தலத்தில் — தங்கியிருந்தார்.

அவர் பங்கு பற்றும் பொதுக் கூட்டம் ஆரம்பமாவதற்கு அரைமணி நேரம் முன்பதாக — பிற்பகல் 2.30 மணியளவில் — நுவரெலியா பம்பறஹல, சென். அன்ட்ரூஸ் வீதியில் — கோல்வ் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் — திடீரென குண்டு ஒன்று வெடித்தது.

அவ்விடத்தில் பாடசாலை மாணவர் ஒருவரின் சடலம் காணப்பட்டது. இறந்த மாணவனின் முகத்திலும் கைகளிலும் குண்டு வெடிப்புக் காயங்கள் காணப்பட்டன. குண்டு ஒன்றைக் கொண்டு சென்ற போது அது வெடித்ததால் அம் மாணவன் இறந்திருக்கலாம் எனக் கருதப்பட்டது.

பம்பரஹல பகுதியில் வசித்து வந்த ஆறுமுகம் செந்தில்குமார் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்ததாகப் பொலீஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. 16 வயதுடைய இம் மாணவன் நுவரெலியா சென் சேவியர் கல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பில் சந்திரிகா தப்பினார்

### 'தூரதர்ஷன்' அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 4

நுவரெலியாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இருந்து இலங்கை ஜனாதிபதி சந்திரிகா தப்பினார் என்று தூரதர்ஷன் நேற்று இரவு அறிவித்தது.

ஜனாதிபதியின் கோடைகால வாசஸ்தலத்துக்கு வெளியே குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார். பலர் காயமடைந்தனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தற்கொலைத் தாக்குதல் படையைச் சேர்ந்த ஒருவரே இந்தக் குண்டை வெடிக்கச் செய்து உயிரிழந்ததாகக் கருதப்படுகின்றது.

—இவ்வாறு தூரதர்ஷன் மேலும் குறிப்பிட்டது. (உ-ஐ)

## கடற்படைக்கு மேலும் 3 கப்பல்கள்

கொழும்பு, மார்ச் 4

சீனா, உக்ரைன் ஆகிய நாடுகளிலிருந்து கடற்படைக்கு மூன்று கப்பல்களைக் கொள்வனவு செய்ய அரசு முடிவெடுத்திருப்பதாக 'சண்டே லீடர்' தகவல் வெளியிட்டுள்ளது.

அதேசமயம் கடற்படைக்கு என கொழும்பு 'டொக்யாட்' நிறுவனம் அமைத்து வரும் நான்கு அதிவேக டோறாப் படகுகளை, கட்டி முடிக்கும் பணி பூர்த்தியாகும் நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## உளவு விமானங்கள் வாங்க வலியுறுத்து!

போர் நடவடிக்கைகளுக்கு உதவியாக மேலும் பல உளவு விமானங்களை கொள்வனவு செய்ய வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

கடந்த வாரம் நடந்த தேசிய பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தில் இத்தகைய உளவு விமானங்களின் தேவை குறித்து பலர் வலியுறுத்திக் கூறினர்.

ஆளில்லாத — தானியங்கி வகையைச் சேர்ந்த இந்த உளவு விமானம் மூலம் யுத்தத்தை முன்னெடுக்கத் தேவையான பல தகவல்களைப் பெறக்கூடியதாக உள்ளது என்றும் அங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய விமானங்களைக் கொள்வனவு செய்வது குறித்து அங்கு முடிவு எடுக்கப்பட்டதா என்பது குறித்துத் தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

(உ-3-150)

## பாகிஸ்தான் ரயில் விபத்தில் 130பேர் பலி!

இஸ்லாமபாத் மார்ச் 4

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் நேற்று இடம்பெற்ற மோசமான ரயில் விபத்தில் 130க்கு மேற்பட்ட பயணிகள் உயிரிழந்தனர். சுமார் 85பேர் காயமடைந்தனர்.

லாகூரில் இருந்து கராச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்த விரைவு ரயில் வண்டியின் ''பிறேக்'' செயற்படாததை அடுத்து—எதிரே

[8 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



இ... தொல்லை ... இல்லாட்டிச் சரிதான் ......!

அனுரா திடுக்கிடும் தகவல்:

## 2 லொறிகளில் ஆயுதம் சு.கவுக்கு கிடைத்தது!

### ரஞ்சன் வழங்கினாராம்

கொழும்பு, மார்ச் 4

''ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் எதிர்க்கட்சி எம்.பியாக நான் இருந்தபோது அக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக ஆயுதங்களை வழங்குமாறு அப்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான ரஞ்சன் விஜேரத்னாவிடம் கேட்டேன். உடனடியாக ரஞ்சன் விஜேரத்னா இரு லொறிகளில் எங்களுக்கு ஆயுதங்களை வழங்கினார். அன்று அவர் வழங்கிய ஆயுதங்களால் தான் இன்று ஆளும்கட்சியில் இருக்கும் அமைச்சர்களும், எம். பிக்களும் பாதுகாக்கப்பட்டனர்.''

— இப்படி ஒரு திடுக்கிடும் தகவலை வெளியிட்டிருக்கின்றார் ஐ.தே. கட்சியின் எம்.பியான அனுரா பண்டாரநாயக்க.

பிரதமர் சிறிமாவோவின் மகனும், ஜனாதிபதி சந்திரிகாவின் தம்பியாருமான அனுரா பண்டாரநாயக்கா இவ்வாறு தகவல் வெளியிட்டார் என ''லங்காதீப'' சிங்கள நாளிதழ் தெரிவித்தது. (உ1.0)

## ஓகஸ்ட்டுக்கு முன் யாழ்.நகருக்கு 300 தொலைபேசி இணைப்புக்கள்

கொழும்பு, மார்ச் 4

யாழ். குடாநாட்டில் பொதுமக்களுக்கும் பொது அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் 300 தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதென கொழும்பில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தொலைத் தொடர்பு பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் அமைச்சுச் செயலாளர் லோசேஸ்வரன், வடக்கு புனரமைப்பு அதிகார சபை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பறையனாளங்குளத்தில் படையினர் மீது தாக்குதல்

கொழும்பு, மார்ச் 4

வவுனியா — மன்னார் வீதியில் பறையனாளங்குளம் பகுதியில் உள்ள படையினரின் நிலைகள் மீது நேற்று முன்தினம் இரவு 10.45 மணியளவில் விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இத் தாக்குதலை தாம் எதிர்த்து முறியடித்ததாகப் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அங்கு நடந்த மோதலில் 4 படையினர் காயமடைந்தனர் என்றும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய படையினருக்கு 3 மாத பயிற்சி போதாது

### பாதுகாப்பு கவுன்ஸிலில் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 4

''புதிதாக இராணுவத்துக்குச் சேர்க்கப்படுபவர்களுக்கு ஆகக்குறைந்தது 9 மாத காலப் பயிற்சி அளிக்கப்படவேண்டும்.''— இவ்வாறு கடந்த வாரம் கொழும்பில் நடந்த தேசிய பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தற்சமயம் புதிதாக இராணுவத்துக்குத் தெரிவு செய்யப்படுவோருக்கு 3 மாத காலப் பயிற்சியே அளிக்கப்படுகிறது. அவர்கள் போரில் முழுமையாக ஈடுபடுவதற்கு இக்குறுகிய காலப் பயிற்சி போதுமானதல்ல என்று மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் வலியுறுத்தினர்.

புதிதாகச் சேரும் துருப்பினரை உடனடியாக 3 மாத காலப் பயிற்சியுடன் போர் முனைக்கு அனுப்புவது என்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

நந்தகுமார் - ஜெயந்தினி தம்பதிகளின்
செல்வப் புதல்வி

★ நந்தினி ★

தனது முதலாவது பிறந்தநாளை 4-3-97 இன்று வெகு விமரிசையாக தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

திருமதி ந. ஜெயந்தினி

மதவடி ஒழுங்கை,
மயிலணி வடக்கு,
சுன்னாகம். (45613)


க. பொ. த. பத்திர (உயர்தரப்) பரீட்சை

## புதிய பாடத்திட்டம்

1997 இலும் அதன் பின்னரும்
நடைபெறவுள்ள பரீட்சைகள் தொடர்பான
மதிப்பீட்டு முறையும் மாதிரி வினாக்களும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**BOND BOOK STALL**

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (45615)


## POSITION VACANT

### Logistics Clerk

UNHCR, Jaffna is seeking a logistics clerk to support the UNHCR programme in Jaffna peninsula

Educational Requirements: G.C.E. 'A' level preferably supplemented by university education. Basic computer literacy, and ability to work independently.

Experience: Several years in logistics related work preferably in procurement, store-keeping and administrative work Technical knowledge of building maintenance and electrical equipment.

Languages: Fluency in Tamil and English, both written and spoken and working knowledge of Sinhala.

Salary: UN GL 3 level

Initially six month period.

Applications to reach UNHCR, Jaffna, 223, Temple Road, Nallur, Jaffna by post only by 14 March 1997.

(45616)


## COLLEGE OF COMMERCE

பெருமாள் கோயில் அருகில் — நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

**A/L DAY CLASS பிரிவு II**

ஆரம்பம்: 6 - 3 - 97 காலை 8.00 மணி

எமது ஆசிரியர் குழு

பொருளியல் — திரு. இராஜேஸ்வரன்
வர்த்தகம் — திரு. பசில்
கணக்கியல் — திரு. வன்னியசிங்கம், திரு. மூர்த்தி
அளவையியல் — திரு. R, P. சர்மா
தமிழ் — திருமதி மீரா
இந்துநாகரிகம் — திரு. ஜோதீஸ்வரன்
இந்துசமயம் — திரு. சிவானந்தன்
நாடகமும் அரங்கியலும் — திரு. கந்தவேள்
கிறிஸ்தவம் — திருமதி மல்லிகா
புவியியல் — பிரபல ஆசிரியர்
அனுமதிகளை உடன் பெற்றுக்கொள்ளவும் (45614)


## யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வர்த்தகர்களுக்கு விடுக்கும் பணிவான வேண்டுகோள்

எதிர்வரும் மகா சிவராத்திரியை முன்னிட்டு 1997 - 03 - 08 ஆம் திகதி சனிக்கிழமை முழுநாளும் வியாபார நிலையங்கள் மூடப்பட்டு ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்பட வேண்டும். தொடர்ந்தும் சனிக்கிழமைகளில் வர்த்தகத் தாபனங்கள் பிற்பகல் 2.00 மணிக்கு மூடப்பட்டு ஞாயிற்றுக்கிழமையும் முழுமையாக மூடிவிடுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்
யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
(சி/234)

## முருங்கையால் விழுந்து மரணம்

நெடுந்தீவு, மார்ச் 4

வீட்டில் தான் பிரியமாக வளர்க்கும் முயல் குட்டிகளுக்கு இலைகளைப் பிடுங்குவதற்காக முருங்கை மரத்தில் ஏறிய ஒருவர் கிளை முறிந்ததால் விழுந்து மரணமானார்.

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த சி. கேதீஸ்வரன் (வயது22) என்பவரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தவராவார். (ஐ-111)

## வாகனம் தருவிப்பு

வடமராட்சி, மார்ச் 4

யாழ். கடற்றொழில் திணைக்களத்துக்கு புதிய 'பிக் அப்' வாகனம் ஒன்று கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளது. (ஐ-173)

## நோயாளி வழியில் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச். 4

காய்ச்சல் காரணமாக மூன்று நாள்களாக மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட வேளை இடைவழியில் மரணமானார்.

அதனையடுத்து சடலம் அச்சுவேலி ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

வல்வெட்டி சமரபாகுபகுதியைச் சேர்ந்த நல்லதம்பி றோசாவதி (வயது55) என்பவரே உயிரிழந்தவராவார்.

அச்சுவேலி ஆஸ்பத்திரியில் இடம்பெற்ற மரண விசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-15)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் கோயில் வீதிக்கும் யாழ். நகர சுற்றாடலுக்கும், பலாலி வீதிக்கும் இடையில் என்வெலப்புடன் பணம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் **து.விக்கினேஸ்வரன், இல.105 அரசடி வீதி, யாழ்ப்பாணம்** என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும், சன்மானம் வழங்கப்படும்.

(45623)

## தேவை

நல்ல நிலையில் உள்ள- அவனுடன் (OVEN) கூடிய காஸ்குக்கர், மண்எண்ணெயில் இயங்கக் கூடிய குளிர்சாதனப் பெட்டி, மண்எண்ணெயில் இயங்கக்கூடிய 2 KVA ஜெனரேட்டர், நூறு சீலிங் சீற்றுகள் ஆகியவை தேவை. கடிதம் மூலம் தொடர்பு:-

**UNHCR அலுவலகம்,**
**223, கோயில் வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

(45617)


வெளிவந்துவிட்டது!

இந்துநாகரிகம்
பாகம் 3
"சொக்கன்"

A/L இந்துநாகரிகம் I
பாடத்திட்டம்
முழுமைக்குமான
விரிவான நூல்

ஸ்ரீ சுப்பிரமணிய
புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
(45622)


## தபால் பொதிகள் வருகின்றன

யாழ் மாவட்டத்துக்கான 119 தபால் பொதிகள் கப்பல்கள் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து தகவல் கிடைத்துள்ளது என்று யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

'மாஹோ' கப்பலில் 83 தபால் பொதிகளும் —

'ரீயூனியன்' கப்பலில் 36 தபால் பொதிகளும்— எடுத்துவரப்படுவதாக அவர் தெரிவித்தார். (ஐ-3)

# மரண அறிவித்தல்கள்

## இறப்பியல்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், இல. 11, குருசோ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இறப்பியல்பிள்ளை அந்தோனிப்பிள்ளை 2 - 3 - 97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இறப்பியல்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், ஞானம்மாவின் அன்புக் கணவரும், யேசுதாசன் (கொழும்பு), யேசுநேசன் (முன்னாள் யா. மா. ந. சபை உத்தியோகத்தர், தற்போது வவுனியா), ஜெயசீலன்(சுகாதாரப்பகுதி யாழ். மா. ந. சபை) ஆகியோரின் அன்புத் தந்தையும், பேளி, ஜெயா, றஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஷன், செறின், கரோலின், கௌசிக்கா, லடிஸ்லஸ், றொபிளின், றேசிக்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 4 - 3 - 97 பிற்பகல் 3 மணிக்கு (பழைய நேரம்) நல்லடக்கத்திற்காக அன்னாரின் இல்லத்தில் இருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. ஜெயசீலன்
(மகன்)

11, குருசோ வீதி,
யாழ்ப்பாணம். (45612)

## அம்பலவாணர் சின்னத்தம்பி

சுழிபுரம் மேற்கு, அம்பலவாணர் சின்னத்தம்பி 27- 02- 1997இல் மலேசியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புக் கணவரும், இராசமலர் (மலேசியா), பாலசுந்தரம் (மலேசியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, காலஞ்சென்ற சின்னாச்சிப்பிள்ளை, பொன்னாச்சி (கனடா), இலட்சுமியார் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் சகோதரருமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. பாலசுப்பிரமணியம்
ஆசிரியர்
விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

''ராஜஸ்தான்''
சுழிபுரம். (9346)

## சுப்பையா தம்பாபிள்ளை

(ஆசாரியார்)

(வேலம்பிராய்-தச்சன் தோப்பு-நாவற்குழி)

வேலம்பிராய் தச்சன் தோப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பையா-தம்பாபிள்ளை 03 - 03 - 1997 அன்று கச்சேரியடியில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சுப்பையா - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுதல்வனும், சுபத்திரையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - தங்கப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்றவர்களான பிரபல மோட்டார் இயந்திர தொழில் வல்லுநர்கள் கனகரத்தினம், ராசதுரை ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கதிர்காமு - கந்தையாவின் (வேலுப்பிள்ளை) ஆசைத்தம்பியும்,

திருமதி. க. கிருஷ்ணமணி, செல்வி தனராணி, சண்முகராஜா (சுவிஸ்), திருமதி. நி. தில்லைநாயகி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சனகலிங்கம் (மரவேலை ஒப்பந்தக்காரர்), குணராணி, நிந்தியானந்தம் (நித்தி மெக்கானிக்) ஆகியோரின் மாமனாரும், அருட்செல்வி (தொண்டர் ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி), கிருஷ்ணகுமார் (கணக்கியல் மாணவன், இங்கிலாந்து), கோபாலன் (1 ஆம் வருடம் மருத்துவ பீட மாணவன், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்),பத்மலோஜினி (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி), யாழ். மத்திய கல்லூரி மாணவர்களான நிமலகாந்தன், கோபிகிருஷ்ணா, யோகிதா (மாணவி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), யாழ். மத்திய கல்லூரி மாணவர்களான யுகவேந்தன், யுகரூபன், தர்சினி (மாணவி, இளையதம்பி வித்தியாலயம்), ஷாலினி (மாணவி, யா/இந்து மகளிர் ஆரம்ப பிரிவு), வித்தியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 04-03-1997 செவ்வாய்க்கிழமை நண்பகல் 1.00 மணியளவில் அவரது மூத்தமகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மு. கனகலிங்கம்
(மருமகன்)

மூத்த மகளின் இல்லம்
281/7, கண்டி வீதி,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம். (45619)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்பேனியாவில் ஆர்ப்பாட்டம்; நாடு முழுவதும் அவசர காலநிலை

அல்பேனியா, மார்ச் 4

அல்பேனியாவில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் நேருக்கு நேர் மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலின் போது 8 வயது சிறுமி கொல்லப்பட்டார். 22 பேர் காயமடைந்தனர்.

கட்டுக்கு அடங்காத நிலை உருவானதையடுத்து நேற்று நாடு முழுதும் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதன்படி பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

அல்பேனியாவில் அமுலுக்கு வந்துள்ள முதலீட்டுத் திட்டங்களை ஆட்சேபித்தே ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. (இ-10)

## ஈரானில் மீண்டும் பூகம்பம்

வடமேற்கு ஈரானில் கடந்த ஞாயிறன்று மற்றுமொரு பூகம்பம் ஏற்பட்டுள்ளது. கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற பூகம்பத்தில் குறைந்தது மூவாயிரம் பேர் மாண்டதுடன் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

வெள்ளிக்கிழமை ஏற்பட்ட பூகம்பத்தினால் சேதமடைந்துபோன பல கட்டடங்கள் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட பூகம்பத்தினால் முற்றாகஅழிந்து போயின. அடுத்தடுத்து இடம்பெற்ற இந்த பூகம்பங்களினால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

வீடுகளை இழந்து நிற்கும் சுமார் 30 ஆயிரம் மக்களுக்கு தற்காலிக தங்குமிடங்களை அமைக்கும் பணியில் கடும் குளிரையும் பொருட்படுத்தாது மீட்புப்படையணிகள் ஈடுபட்டு வருகின்றன. (இ-10)

# சுதந்திர பலஸ்தீனம் அமைத்தால் அமைதிப் பேச்சு முறிந்து போகும்!

## இஸ்ரேல் பிரதமர் எச்சரிக்கை

ஜெருசலேம், மார்ச் 4

''பலஸ்தீனம் தன்னிச்சையாக தனிநாடு அமைக்குமானால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்''

இப்படி இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகு எச்சரிகை விடுத்துள்ளார்.

உலக நாடுகளின் சுடும் எதிர்ப்பினையும் மீறி பலஸ்தீனப்பகுயில் யூதக் குடியிருப்புகளை நிர்மாணிக்கும் திட்டத்தை நிறைவேற்றப் போவதாக இஸ்ரேல் 'அடம்' பிடித்துவருகிறது. யூதக் குடியிருப்புகளை அமைக்கும் திட்டத்தை இஸ்ரேல் கைவிடாதுபோனால் பலஸ்தீனம் தனிநாடு அமைப்பதைத் தவிர வேறு மாற்றுவழியில்லை என பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் தெரிவித்துள்ளார் (இ-10)

# பிங்கின் இறுதி விருப்பத்தின்படியே அஸ்தி சீனக்கடலில் கரைப்பு

பீகிங், மார்ச் 4

சீனத் தலைவர் டெங் ஷியா ஓ பிங்கின் இறுதி ஆசையை நிறைவேற்றும் விதத்திலேயே அவரது அஸ்தி சீனக்கரைக்கு அப்பால் கடலில் கரைக்கப்பட்டது.

92 வயதான டெங் ஷியா ஒபிங் சடந்த வாரம் மரணமானது தெரிந்ததே.

சீனாவின் ஆட்சியின் கீழ் ஹொங்கொங் வருவதைக் காணாமல் தலைவர் டெங் ஷியா ஓ இறந்துள்ளதால் அவரது அஸ்தி ஹொங்கொங் அருகே உள்ள கடலில் கரைக்கப்பட வேண்டும் என சில அமைப்புகள் கோரிக்கை விடுத்திருந்தன.

இருப்பினும் தலைவரின் இறுதி விருப்பத்தின்படி சீனக் கரைக்கு அப்பால் அஸ்தியைக் கரைப்பது தங்களது கடமை என சீனத் தலைவர்கள் தீர்மானித்து அவ்வாறே செய்தனர் (இ-10)

# படகுப் போட்டியின் போது குவைத் இளவரசர் மரணம்!

குவைத் நகரம், மார்ச் 4

குவைத்தில் கடந்த ஞாயிறன்று நடைபெற்றசர்வதேச விசைப் படகுப் போட்டி ஒன்றில் இடம் பெற்ற விபத்தில் குவைத் இளவரசர் ஷேக் கலீட் அல் சதாத் கொல்லப்பட்டார்.

அவரது படகு கட்டுப்பாட்டை இழந்து மேல் எழுந்ததாகவும் —

படகு காற்றில் பல முறை சுற்றிச்சுற்றி வந்த பின்னர் அவரின் தலை படகின் தளத்தில் மோதியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# உலக அரங்கில்

## பிரெஞ்சு அரசு நடவடிக்கை

பாரிஸ், மார்ச். 4

பிரான்ஸ் நாட்டுக்குள் சட்டவிரோதமாகக் குடியேறுவோர் எதிரிகளாகக் கணிக்கப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என பிரெஞ்சுப் பிரதமர் சிராக் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸில் அதிகரித்து வரும் இனச்சச்சரவுகளுக்கு முடிவுகட்ட, இதைத் தவிர வேறுவழியில்லை எனவும் அவர் கூறினார்.

அதேவேளை சட்டபூர்வமாக பிரான்ஸில் தங்கிப் பணிபுரிவோர் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-10)

# பாலியல் குற்ற விசாரணைகளில் வேகம் குன்றாதிருக்க புதிய உத்தி

## பத்திரிகைகளில் தகவல்

பிரேசெல்ஸ், மார்ச் 4

பெல்ஜியம் நாட்டில் பாலுணர்வுப் பலாத்காரங்களுக்கு உள்ளாக்கப்படும் சிறுமியரின் பெற்றோர்கள் அது குறித்த விசாரணைகளின் தீவிரம் காலப்போக்கில் குறைந்துவிடும் என அஞ்சுகின்றனர்.

குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வரை விசாரணைகளைச் சூடாகவே வைத்திருக்கும் புதுமையான முயற்சி ஒன்றை அங்குள்ள பெற்றோர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

அதாவது அந்தச் சம்பவம் குறித்து தங்களுக்குத் தெரிந்த உண்மைகளையும் மற்றும் தகவல்களையும் தனியான ஒரு பத்திரிகையில் பிரசுரித்து அவர்கள் வெளியிடுகிறார்கள். (இ-10)

# முஸ்லிம் தீவிரவாதத்துக்கு எதிராக துருக்கி நடவடிக்கை எடுக்கும்

அஸ்காரா, மார்ச் 4

துருக்கியில் அதிகரித்து வரும் முஸ்லிம் தீவிரவாதத்தினை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என அந்நாட்டு இராணுவ அதிகாரிகள் பிரதமருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் 9 மணிநேரம் நடைபெற்ற தேசிய பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டத்தின் பின்னர் முஸ்லிம் தீவிரவாதத்தை தடுத்து நிறுத்துவதற்கு அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவற்றை இராணுவம் பட்டியலிட்டுத் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் தீவிரவாதம் காரணமாக அல்ஜீரியாவின் இராணுவ ஆதரவு அரசாங்கம் பல நெருக்கடிகளை எதிர்நோக்கிஇருப்பதுதெரிந்ததே. (இ-10)

# தீவுப் பகுதியில் பரீட்சார்த்த உருளைக் கிழங்கு உற்பத்தி

## அகதிகளுக்கான ஐ.நா தூதரகம்உதவி

தீவுப்பகுதியில் பரீட்சார்த்தமாக உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்கு உற்பத்திக்குத் தேவையான காலநிலை தீவுப்பகுதியில் தற்போது இல்லாதபோதிலும் விளைச்சலில் கணிசமான முன்னேற்றம் காணப்படுவதாகவும்—

உரிய காலத்தில் பயிரிடப்பட்டிருப்பின் அமோக விளைச்சல் கிட்டியிருக்கும் எனவும் தீவுப்பகுதி விவசாய போதனாசிரியர் எஸ். என். இராசையா கூறினார்.

வேலணை, அனலைதீவு, நாரந்தனை பகுதிகளில் இருபது பேருக்கும் —

நெடுந்தீவு, நயினாதீவுப் பகுதிகளில் ஒன்பது பேருக்கும் பரீட்சார்த்த செய்கைக்கென 'டிசைறி' எனப்படும் ஹோலன்ட் இன விதை உருளைக்கிழங்குவழங்கப்பட்டது

அகதிகளுக்கான ஐ, நா. தூதரகத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பரீட்சார்த்த செய்கைக்கென நூறு கிலோ விதை உருளைக் கிழங்கு வழங்கப்பட்டது.

செயற்கைப்பசளை அறுபது கிலோவும், இயற்கைப் பசளை ஒன்றரை மெற்றிக் தொன்னும் இரசாயனத்துக்கும் 25 லீற்றர் மண்எண்ணெய்க்குமென ஆயிரத்து 350 ரூபாவும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. (இ-111)

## விளையாட்டு போட்டிகள்

அராலி சரஸ்வதி மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி கோ. அம்பலவாணர் தலைமையில் நடைபெறும். (இ)

★ ★ ★

வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று செவ்வாய் பிற்பகல் 1-30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். (இ)

## திருட்டு

உடுவில், மருதனார்மடம், இணுவில் போன்ற தோட்ட வெளிகளில் செய்கை பண்ணப்பட்டுள்ள உருளைக் கிழங்கு இரவு வேளைகளில் திருடப்படுவதாகக் கூறப்படுகிறது.

மருதனார்மடம் சந்தையில் உருளைக்கிழங்கு 'தாராளமாக விற்பனைக்கு வருவதால் உருளைக்கிழங்கின் விலை வெகுவாகக் குறைந்து உள்ளது.

ஒரு கிலோ தரமான உருளைக்கிழங்கு முப்பது ரூபாவாக விற்பனையாகிறது.

ஊரடங்குச் சட்டத்தினை திருடர்கள் சாதகமாக்கிக் கொண்டு தமது கைவரிசையைக் காட்டுகின்றனர் என்று கூறப்படுகிறது. (இ-152)

# துப்பாக்கிகளைஒப்படைப்பதற்கான காலக்கெடு இன்று முடிவடைகிறது

## வைத்திருப்போருக்கு மரண தண்டனையும் வழங்கப்படும்

கொழும்பு, மார்ச் 4

சட்டவிரோதமாக வைத்திருக்கும் துப்பாக்கிகளை ஒப்படைப்பதற்காக வழங்கப்பட்டுள்ள பொது மன்னிப்பு கால அவகாசம் இன்று பகல் 12 மணியுடன் முடிவடைவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த மன்னிப்புக் காலத்தின் பின் எவராவது சட்டவிரோதமாக துப்பாக்கிகளை வைத்திருத்தால் அவர்கள் மரணதண்டனைக்கு அல்லது 5 முதல் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்றும் அறிவிழக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக துப்பாக்கிகளை வைத்திருப்போர் பற்றிய சரியான தகவலை வழங்கினால் சன்மானம் வழங்கப்படும் என்றும் —

இவ்வாறு ஒவ்வொரு துப்பாக்கிக்கும் 2 ஆயிரத்து 500 ரூபா சன்மானமாக வழங்கப்படும் என்றும் — பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-5)

## தவக்காலச் சிந்தனை

(21 ஆம் நாள் - செவ்வாய்)

நோயால் மனம் தளர்ந்தநிலை அல்லது இதுதான் தலைவிதி என ஏற்றுக் கொண்டு விரக்தியின் எல்லைக்கே சென்று கொண்டிருக்கும் நோயாளியின் வாழ்க்கையிலே இயேசு தலையிடுகிறார். எமது வாழ்வில் நடக்கும் துன்ப, துயரங்கள், புலம்பெயர்வுகள், உயிர், உடைமை இழப்புக்கள், உடல், உள நோய்கள் போன்றவற்றால் நாம், அல்லலுறும் நிலையிலே இறைவன் எம்மைக் கைவிடுவதில்லை. அத்துன்ப துயர்கள் மத்தியில் அவர் இருக்கின்றார். நாம் அவரின் உதவியை நாட வேண்டும் என விரும்புகின்றார். எனது பதில் என்ன? இறைவனின்றி நானொன்றுமில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அதே போல் நமது விருப்பமின்றி, நமக்கும் இறைவனுக்குமிடையே ஈடுபாடின்றி அவர் செயற்படமாட்டார் என்பதும் உண்மையே. தவக்காலம் மனமாற்றத்தின் காலம் என்பதை உணர்வோமா?

தூ. மரியநாயகம்

# நீண்டகாலமாக மூடிக்கிடக்கும் பண்ணாகம் அ. மிஷன் பாடசாலை

திருநெல்வேலி, மார்ச் 4

பனிப்புலம் காலையடியில் உள்ள பண்ணாகம் வடக்கு அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை நீண்டகாலமாக இயங்காத நிலையில் மூடப் பட்டுள்ளது.

இப்பாடசாலைக்கு அதிபரும் இல்லை; ஆசிரியர்களும் இல்லை. மாணவர்கள் அயலில் உள்ள பாடசாலைகளுக்குச்சென்று கல்விகற்று வருகின்றனர்.

சங்கானைக் கல்விக்கோட்டத்தில்இந்தஒரு பாடசாலை மட்டுமே மூடப்பட்டு இயங்காத நிலையில் உள்ளது.

இதுபற்றி அப்பகுதி மக்களும், அங்குள்ள பொது நல அமைப்புகளும் அக்கறையின்றி இருப்பதாகவும் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ-135)

## செஞ்சிலுவைப் பிரதிநிதி விஜயம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தென்னாசியப் பிரிவு அதிகாரியான செற்றிக் பிரளா எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

ஏற்கனவே யாழ். அலுவலக வதிவிடப் பிரதிநிதியாகப் பணியாற்றியுள்ள அவர், இம்முறை இங்கு 3 நாள்கள் தங்கியிருந்து அமைப்பின் செயற்பாடுகளை ஆராய்வார். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**பௌதிகவியல்**

தனிப்பட்ட சிறு குழு வகுப்புகளாகப் பௌதிகவியல் கற்பிக்கப்படும். தொடர்பு: இல. 122, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
(45589)

**காணவில்லை**

01-03-97 அன்று கைச் சங்கிலி ஒன்று ஓட்டுமடம் தேவாலய வீதிக்கும், கலட்டி நாச்சிமார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வைத்தீஸ்வரக் கல்லூரியில் சி. சரவணபவானந்தன் ஆசிரியரிடம் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
[45604]

**மணமகன் தேவை**

கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, வசதியுள்ள பெற்றோர் தங்கள் அழகிய ஏகபுத்திரிக்கு உள்நாட்டில் அல்லது, வெளிநாட்டில் வேலை செய்யும் தகுதியான இளம் மணமகனை எதிர்பார்க்கின்றனர். மே/பா இல. 559 'உதயன்', யாழ்ப்பாணம்.
[45608]

## சர்வதேச மகளிர் தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

சர்வதேச மகளிர் தினம் எதிர்வரும் 8 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனை ஒட்டி மகளிர் மேம்பாட்டுக் கருத்தரங்குகள் பல இடங்களிலும் நடைபெற்று வருகின்றன. (ஐ-111)

## நெடுந்தீவுக்கு விசேட அ. அட்டை

நெடுந்தீவு, மார்ச் 4

நெடுந்தீவு பகுதி மக்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்கும் வேலைகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன. இதற்கான விண்ணப்ப படிவங்கள் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு எடுத்துவரப்பட்டுள்ளன. 10 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் விசேட அ. அட்டை வழங்கப்படும்.
(ஐ-111)

## பயணிகள் தங்க கொட்டகை

நெடுந்தீவு, மார்ச் 4

குறிகாட்டுவான் இறங்கு துறையில் பயணிகள் தங்கி இளைப்பாற வசதியாக கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம் இதனை அமைத்துள்ளது.
(ஐ-117)

## ஓய்வூதிய அதிகரிப்பு தாமதமாகும்

தென்மராட்சி, மார்ச் 4

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் வழங்கப்படவிருந்த ஓய்வூதிய அதிகரிப்பு மே மாத நிலுவையுடன் வழங்கப்படுமென தெரியவருகிறது.

15-01-1997ஆம் திகதிய 2/97 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைப் பிரகாரம் அனைத்து ஓய்வூதியர்களின் ஒய்வூதிய அதிகரிப்பு உரிய படிவங்களில் தயாரிக்கப்பட்ட பின்னரே வழங்கப்படுமெனவும், உரிய படிவங்கள் தயாரிக்க இரண்டு மாதங்களாவது செல்லலாமெனவும், மே மாத ஓய்வூதிய வவுச்சருடன் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய நிலுவையும் வழங்கப்படுமெனவும் தெரியவருகிறது.
(இ-117)


உ

அருள்மிகு ஐயனார் தேவஸ்தானம்
சுன்னாகம்

**சம்புரோக்ஷண கும்பாபிஷேகம்**

காலம்: **5 - 3 - 97 புதன் கிழமை**
நேரம்: **9. 30 மணி காலை**

அன்பர்கள் பால், தயிர், இளநீர், பூ முதலிய அபிஷேகப் பொருள்களை உதவியும், இவ்விழாவில் கலந்தும் ஐயன் அருள் பெற்றுய்வார்களாக.

நிர்வாகசபை,
ஐயனார் தேவஸ்தானம்,
சுன்னாகம்.

(45610)



சங்கானை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வ. உ)

எம்மிடம் இசூஸ் லொறி புதிய உதிரிப்பாகங்கள் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்,
சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(சி/230)



**தேவை**

திறமையும் அனுபவமும் மிக்க ஆண்களுக்கான ஆடைகள் வெட்டித்தைக்கும் ஆண்களும், பெண்களுக்கான ஆடைகள் வெட்டித்தைக்கும் பெண்களும் உடனடியாகத் தேவை.

நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்:

**சிற்றி காமன்ஸ் & ரெக்ஸ்ரைல்ஸ்**
திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி.

**சிற்றி காமன்ஸ் & ரெக்ஸ்ரைல்ஸ்**
இணுவில் சந்தி, இணுவில்.

(45607)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



| உதயம்: | அஸ்தமனம்: |
|---|---|
| 18 | 13 |
| — | — |
| 11 | 02 |
| — | — |
| 1911 | 1997 |

13-02-97 அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர்

**முருகேசு பொன்னுச்சாமிப் பத்தர்**

(யாழ். ஆபரணத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஸ்தாபகரும், முன்னாள் தலைவரும்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை (04 - 03 - 97) இன்று செவ்வாய்க்கிழமை வில்லூன்றித் தீர்த்தக்கரையில் நடைபெறும். மறுநாள் 05-03-97 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் வீட்டுக்கிருத்தியம் நடைபெறும். அத்தருணம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து சகலவிதத்திலும் உதவி செய்த அனைவருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**பொன்ராஜ்** மகன் (சுவிஸ்),
**இன்பகுமாரி** (மருமகள்),
**கலைச்செல்வி** (பேர்த்தி), குகராஜ் (பேரன்),
பெறாமகன் **ந. அருள்ராஜ்.**

46, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
(45598)

## தேவை: 106 பஸ்கள் சேவையில்: 30 மட்டுமே!

"குடாநாட்டில் பஸ் போக்குவரத்தைச் சீராக்க 106 பஸ்கள் தேவை ஆனால் தற்போது உள்ளவை முப்பது பஸ்கள் மட்டுமே" — என்கிறார் வடபிராந்தியபோக்குவரத்துச் சபைப் பொது முகாமையாளர் திரு. எஸ். சொக்கலிங்கம்.

குடாநாட்டில் சகல பகுதி மக்களுக்கும் உரிய பஸ் சேவையை வழங்க எமக்கு 106 பஸ்கள் தேவையாக உள்ளன.

ஆனால் எம்மிடம் தற்போதுள்ள 30 பஸ்களைக் கொண்டு சிறந்த சேவையை வழங்க முடியாதுள்ளது.

இதனால் அரசாங்கத்திடம் திட்டம் ஒன்றைச் சமர்பித்துள்ளோம்.

இவ்வருட முடிவுக்குள் எமக்கு 76 பஸ்களை அனுப்புமாறு கேட்டுள்ளோம்.

உடனடியாக 40 பஸ்களை அனுப்பினால் ஓரளவு சேவையைச் சீராக்க முடியும் என்றும் கூறியுள்ளேன்.

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 15 | 02 |
| — | — |
| 05 | 02 |
| — | — |
| 1922 | 1997 |

**அமரர் நாகமணி வைரமுத்து**
**(கபில்)**
(புகையிரதத் திணைக்கள ஓய்வூதியர்)

எமது குடும்பத் தலைவர் அமரர் நா. வைரமுத்து அவர்களின் இறுதிச் சடங்கில் பங்கு பற்றியோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் பலவிதமான உதவிகளைச் செய்தோருக்கும், பின்னர் கேள்வியுற்று வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று 04-03-97 நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

3/8, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ் நகர்.
(9343)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு: | மறைவு: |
|---|---|
| 19 | 02 |
| — | — |
| 05 | 02 |
| — | — |
| 1931 | 1997 |

**அந்தோனிப்பிள்ளை மரியதாசன்**
**(இளைப்பாறிய ஆசிரியர், யா/ இந்துக்கல்லூரி)**

அப்பா! நீங்கள் அடிக்கடி கூறுவது போலவே நோய், பிணியின்றி பாயில் படுக்காமல் மரணபயமின்றி இயற்கை எய்திவிட்டீர்கள். பேராதரவு தந்து நன்நிலைக்காளாக்கிய உங்கள் பிரிவுத்துயர் எங்கள் உள்ளத்தைச் சுடுகின்றது. எமது உணர்வுகள் அழிகின்றன செய்வதறியாது திகைக்கின்றோம். உங்கள் அருமைத் திருமுகம் எங்கள் மனக்கண்முன் அடிக்கடி வருகின்றது. உங்கள் மணிமொழிகள் காதில் ஒலிக்கின்றன. உங்கள் அருளாட்சி எங்களைக் காக்கும்என்றுஎன்றென்றும் நம்புகின்றோம்.

இன்று 04- 03- 1997 நடைபெறும் திருப்பலியிலும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையிலும் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, மக்கள்.**

நவாலி தெற்கு,
மானிப்பாய்.
(45561)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண
நல்லூர்

திருநெல்வேலி, பழங்கிணற்றடி



# ஸ்ரீ வீரகத்திவிநாயகர்



# கைலாயவாகன வெள்ளோட்ட விழா மலர்

## அழகொழுகும் கைலாய வாகனத்தில் விநாயகப்பெருமான் இன்று திருவுலா

இன்று 4 - 03 - 97 யாழ்ப்பாணம் திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கெனப் புதிதாக உருவாக்கப்பட்ட கைலாய வாகனத்திலே எம் பெருமான் எழுந்தருளி வீதி உலா வரவுள்ளார்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் தெய்வப்பதியாம் திருநெல்வேலியிலே சைவ ஆலயங்கள் பலவுள. திருநெல்வேலி மண்ணின் வளம்போல மக்களும் வளமுடன் வாழ்கின்றனர், மண்வளமும் மனவளமும் ஒருங்கிணைந்திருப்பதனாலேதான் அறிஞர்கள், புலவர்கள், கல்விமான்கள் திருநெல்வேலிப்பதியை தம் வாழிடமாகக் கொண்டுள்ளனர்.

பசுவதைக்கு அஞ்சிப் பரதேசம் போனவர் என்று கூறப்படும் சுவாமி ஞானப்பிரகாசரைத் தந்தது திருநெல்வேலி மண். சிவஞான சித்தியாருக்கு உரைகண்ட இந்த மகான் பிறந்து வளர்ந்து ஓடியுலாவிய மண்ணிலே சைவமும் தமிழும் தழைத்து வளர்வதில் வியப்பில்லை.

வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலைக் கட்டுவிக்க வைத்திலிங்கச் செட்டியாருக்கு உந்து சக்தியாக இருந்தவரும், ஈழத்தின் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் ஊற்றுக்காலாக அமைந்தவரும், நன்னூலுக்கு நல்லுரை கண்டவருமான கூழங்கைத் தம்பிரான்என்னும் கனகசபாபதியோகி திருநெல்வேலியிலேயே சமாதி வைக்கப்பட்டார் என்பர். அவரது சமாதிக்கோயில் பூதவைரவர் கோயில் என அழைக்கப்பட்டு, இன்று ஞான வைரவர் கோயிலாகத் திருநெல்வேலியிலே காட்சியளிக்கின்றது. கல்விக்கும் திருநெல்வேலிக்கும் நீண்டகாலமாக இருந்து வந்த தொடர்பினையே இச் சமாதிக்கோயில் புலப்படுத்தி நிற்கின்றது.

சைவாசிரிய கலாசாலை, சைவவித்தியாவிருத்திச் சங்கம் முதலான சைவத்தமிழ்க் கல்விசார் நிறுவனங்கள் திருநெல்வேலியிலே நிறுவப்பட்டமையும் அம்மண்ணின் மகத்துவம் கருதியே எனலாம்.

மட்டுவில் தந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை மரணபரியந்தம் திருநெல்வேலியையே தம் வாழ்விடமாகக் கொண்டார். அளவெட்டி தந்த அறிவுச்சுடர் பொ. கைலாசபதி திருநெல்வேலியிலே நீண்டகாலமாக வாழ்ந்தார். இவர்கள்



வாழ்ந்த சூழலிலேதான் பழங்கிணற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகராலயம் விளங்குகின்றது. கைலாசபதியும், பண்டிதமணியும் கைதொழுத கணபதிக்கு இன்று கைலாய வாகனம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

**எஸ். சிவலிங்கராஜா**

அழகான சித்திரத்தேர், அற்புதமான சப்பரம், மனதைக்கவரும் மஞ்சம். இவற்றிலெல்லாம் ஞான உலா வந்த கணபதி, இன்று புதிய கைலாயவாகனத்திலே பவனி வருகின்றார்.

சித்திரத்தேர், சப்பரம் மஞ்சம், அழகான வாகனங்கள் அனைத்தையும் நிர்மாணித்த ஆறுமுகம் சிற்பாலய அதிபர் ஆ ஜீவரத்தினம் அவர்களே இக்கைலாய வாகனத்தையும் அழகொழுக நிர்மாணித்திருக்கின்றார். ஏறத்தாழ நூற்றிஇருபத்தைந்து சித்திரத்தேர்களை நிர்மாணித்த பெருமை சிற்பச் சக்கரவர்த்தி ஆ. ஜீவரத்தினம் அவர்களுக்கு உரியது.

சிற்பச் சக்கரவர்த்தியின் ஒவ்வொரு படைப்பிலும் ஒவ்வொரு புதுமை இருக்கும். அழகியல் அம்சங்களில் அவர் மனம் ஈடுபட்டிருக்குமாற்றினை அவரது படைப்புக்களிலே காணலாம். ஈழத் தமிழ் மக்கள் இவ்வளவு நெருக்கடிகளைச் சந்தித்த போதிலும் நாம் நமது பண்பாடு, கலை, கலாசாரம் முதலியவற்றிலே குன்றிப் போகவில்லை என்பதையே இவ் வெள்ளோட்டவிழா

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பழங்கிணற்றுப் பெருமான்

நிறைந்த நீறும் நெற்றியி நயனமும் நெறிநூலும்
நினைத்த போதெஞ் சிந்தையி லுறைதரு
நிலையோனே
உறைந்து வானும் உயிர்களு மிடருறு மொருபோதில்
உதிக்கு வேழத் தொருபர னாயமை உலகேசா
மறைந்து மாலும் வழிபட ஆலதில் மலர்வோனே
மகிழ்ந்து பூதர் வலமிடஞ் சூழ்தரு மறையோனே
பறைந்து பூசை பண்ணிடு பாடலிற் படர்வோனே
பரந்த ஞானப் பழங்கிணற் றைங்கரப் பெருமானே.

- ச. தங்கமாமயிலோன்

### சிறப்பு உற்சவங்கள்

| | | |
|---|---|---|
| கைலாய வாகனம் | — செவ்வாய் | — 04 - 03 - 97 |
| சப்பரம் | — வியாழன் | — 06 - 03 - 97 |
| தேர் | — வெள்ளி | — 07 - 03 - 97 |
| தீர்த்தம் | — சனி | — 08 - 03 - 97 |

## கைலையின் புண்ணியக் காட்சியை பக்தர்களுக்குக் காட்டும் வாகனம்

**வே**ண்டுவார் வேண்டுவதை ஈன்றருளும் வேதாரண்ய வீரகத்தி விநாயகர் யாழ்ப்பாணத்து திருநெல்வேலிப் பதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றார். மாசிமாதத்து அமாவாசைத்திதியில் தீர்த்தோற்சவம் நடைபெறக் கூடியதாக பதினாறு தினங்கள் நடைபெறும் வருடாந்த மகோற்சவம் சென்ற 21-2-1997 முதல் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 10 ஆம் திருவிழா மஞ்சமும், 14 ஆம் திருவிழா சப்பரமும், 15 ஆம் திருவிழா இரதோற்சவமும், 16 ஆம் திருவிழா தீர்த்தோற்சவமும், 17 ஆம் திருவிழா பூங்காவனமும், 18ஆம் திருவிழா வைரவர் உற்சவமும் இங்கு மிகச் சிறந்த முறையில் நடைபெற்றுக் கொண்டுவருகின்றன.

கடந்த 1985 ஆம் ஆண்டு இக்கோயிலில் மகோற்சவம் ஆரம்பமாகியது. 1986 ஆம் ஆண்டு புதிய சித்திரத்தேரும் புதிய சப்பரமும் உருவாக்கப்பட்டன. இவை உருவாகுவதற்கு மூலகாரணமாக இருந்தவர் அமரர் ''விநாயக தொண்டன்'' திரு. க. நாகரெத்தினம் அவர்கள். 1994 ஆம் ஆண்டில் புதிய சித்திரமஞ்சம் உருவாக்கப்பட்டது. வீரகத்தி விநாயகர் இவற்றில் வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் புரியும் அற்புதக் காட்சியைக் காணக் கண்கோடி வேண்டும் என்றால் மிகையாகாது.

தான் பவனி வருவதற்கு ஒரு கைலாய வாகனம்தேவையென விநாயகர் எண்ணினார் போலும். அதற்கமைய இம்முறை புதிய சித்திர வேலைப்பாடுடன் கூடிய கைலாயவாகனம் உருவாக்கப்பட்டுள்ளது.

கைலாய வாகனம் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலும், மற்றும் ஒரு சில கோயில்களில் மட்டுமே உள்ளது. தம்பி கந்தன் கைலாய வாகனத்தில் வலம் வரும் பொழுது அண்ணன் கணபதி சும்மா இருப்பாரா? தனக்கும் ஒரு கைலாய வாகனத்தை தன் அடியார்களைக் கொண்டு உருவாக்கி விட்டார்.

**சிவஸ்ரீ**
**வை. ஜெகதீஸ்வரக்குருக்கள்**

இக் கோயிலில் 12 ஆம் திருவிழாவாக (4-3-97) கைலாய வாகனம் அமைவது அடியார்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

கைலாய மலையிலே இறைவன் அம்மை அப்பனாக பூதகணங்களுடனும், நந்திதேவர் நாரதர் ரிஷிகள் புடைசூழ அமர்ந்திருக்கும் கண்கொள்ளாக் காட்சியை மானிடராகிய நாம் காண்பதென்பது முடியாத செயலாகும்.

ஒருமுறை திருநாவுக்கரசு நாயனார், கைலாய மலையிலே இறைவனைக் காண விரும்பி வெயிலிலும் மழையிலும், கல்லிலும், முள்ளிலும் நடந்தும், உருண்டும் சென்று, இயலாது போகவே அவருடைய பக்தியை பாராட்டி, இடைவழியில் அருள் புரிந்தார் கையிலாய நாதர்.

இலங்கை வேந்தன் இராவணன் ஒரு சமயம் தனது புஸ்பக விமானத்தில் பயணம் செய்யும் பொழுது பயணத்திற்கு இடையூறாக விருந்த கைலாய மலையை,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இடர் சூழ்ந்த போதும் இறைபணி

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மைச் சுகத்தவனே — மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண்.

— இராமலிங்க சுவாமிகள்

பழவினைகள் பாறும் வண்ணம் பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் திருநெல்வேலி பழங்கிணற்றடி விநாயகருக்கு புதியதோர் கைலாய வாகனம் உருவாக்கம் பெற்றிருப்பது அறிந்து அகமகிழ்கின்றேன்.

திருவும் கல்வியும் சீரும் தழைத்த திருவூராகிய திருநெல்வேலியில் திருநெறிய சைவப் பாரம்பரியமும் பக்தியும் பண்டு தொட்டு நின்று நிலவுகின்றன. இத்திருவூரில் வாழும் விநாயகப் பெருமானின் மீளா அடியவர்கள் தம் குலதெய்வத்தை கைலாய நிலைதன்னில் கண்குளிரக் காணும் பொருட்டு, நாடறிந்த சிற்பக்கலை மேதை திரு. ஜீவரத்தினம் ஆச்சாரியாரின் கைவண்ணத்தில் கைலாய வாகனம் உருவாக்கியிருப்பது பாராட்டுக்குரியது.

பேசாப் பொருளை பேசவைக்கும் பெரும் கலைஞர் குழாமே திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயக் கலைஞர்கள் என்பதனை, அவர்கள் உருவாக்கிய திருக்கோயில் ரதச் சிற்பங்கள் சான்று பகரும். நாட்டின் அனர்த்தங்கள், நலிவுகள், இடப்பெயர்வுகள் என்று எத்தனையோ இடர் சூழ்ந்த போதும் இறைபணியை நாம் தொடர அஞ்சோம் எனத் தமது திருப்பணியை தொடரும் திருநெல்வேலி வாழ் திரு அடியார்க்கும் கைலாய வாகனம் உருவாக்கிய கலைஞர்களுக்கும் நல்லருள் கிடைக்கப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

**ஆறு. திருமுருகன்**

### சிறந்தென்றும் வாழியரே

தேவியொடு தேவனுறை திருக்கையிலை
மாமலையைத்
தேவரொடு முனிவர்சித்தர் தினம்பணியும்
அம்மலையை
மேவியெடுத் திராவணனும் வீணைமீட்டுந்திறத்தை
மீனாமை சேடனிவை மேலமரு சிற்பங்களாய்ப்
பூவிலெடுத் தேயெவரும் புகழுமுயர் வாகனமாய்ப்
போற்றுமுயர் பழங்கிணற்றுப் பிள்ளையார்
வீதிவரச்
சீவியெலாஞ் செய்தமைத்த சீவரத்நச் சிற்பியவர்
தேசமெ லாம்போற்றச் சிறந்தென்றும் வாழியரோ

- ச தங்கமாமயிலோன்

கைலாய வாகன வெள்ளோட்டம் சிறப்புற இறைஞ்சுவோர்:

**தாஸ் ஸ்ரோர்ஸ்,**
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

**ராம்கரன் புத்தகசாலை,**
பலாலி வீதி,
திருநெல்வேலி.

**ஐங்கரன் களஞ்சியம்,**
பலாலி வீதி,
திருநெல்வேலி.

**கரன் ரெக்ஸ்ரைல்ஸ்,**
திருநெல்வேலி.

**பற்சிகிச்சை நிலையம்,**
ந. நடேசன்,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**வேல் முருகன் கபே,**
பலாலி வீதி,
திருநெல்வேலி.

**லிங்கம்வர்த்தகநிலையம்,**
திருநெல்வேலி.

**குமரன் வர்த்தகநிலையம்,**
பலாலி வீதி,
திருநெல்வேலி
(விளம்பர இல. சி-231)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சை: மற்றும் சில முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 4 கடந்த வியாழனன்று வெளியான ஜி.சீ ஈ உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் மேலும் பல பாடசாலைகளின் முடிவுகள் கிடைத்துள்ளன. அவை கீழே பிரசுரமாகின்றன.

**யாழ். மத்திய கல்லூரி**

★ உயிரியல்: ஏ3சி ஒருவர், ஏ 2 பி எஸ் — ஒருவர், 3பிசி — ஒருவர்.

★ கணிதம்: 4சி — ஒருவர்.

★ வர்த்தகம்: 2ஏபிசி — ஒருவர், ஏ2பிசி — இருவர், ஏபி2சி — இருவர், ஏபிசிஎஸ் — ஒருவர், ஏ2சிஎஸ் — ஒருவர், 3பிசி — ஒருவர், 3பிஎஸ் — ஒருவர், 2பி2சி — ஒருவர்.

★ கலை: ஏ2பிசி — ஒருவர் பி3சி — ஒருவர்.

**கொக்குவில் இந்து**

★ கணிதம்: 2ஏ2பி — ஒருவர், 3பிசி — மூவர், 2பி2சி — நால்வர், பி3 சி— இருவர்.

★ உயிரியல்: 3ஏசி — ஒருவர், ஏ3சி — ஒருவர், 2பிசிஎஸ் — ஒருவர் ஏ2சிஎஸ் — ஒருவர்.

★ வர்த்தகம்: 4ஏ — ஒருவர் (சிவராஜசிங்கம் ஜெயகாந்த்), 3ஏபி — ஒருவர், 3ஏசி — இருவர், 3ஏஎஸ் — ஒருவர், 2ஏ2பி — ஒருவர், 2ஏபிசி — மூவர், 2ஏ2சி — ஒருவர், ஏபி2சி — ஏழுபேர்.

★ கலை: 2ஏ2பி — இருவர், ஏ2பிசி — ஐவர், 4பி— — ஒருவர், 2ஏபிசி —ஒருவர், ஏ3பி — ஒருவர், ஏபி2சி — நால்வர், ஏ 2பிஎஸ் — ஒருவர்.

**சென். சாள்ஸ் ம.வி**

★ கலை; ஏபிசிஎஸ் - ஒருவர், பி2சிஎஸ் — ஒருவர், 2பி2எஸ் — ஒருவர், 4சி — ஒருவர், 2சி2எஸ் — ஒருவர், சி3எஸ் ஒருவர்.

**யாழ்ப்பாணக் கல்லூரி**

★ கணிதம்: 2ஏபிசி — இருவர், 2ஏபிசி — ஒருவர், ஏ 2பிசி — ஒருவர், ஏபி2சி— ஒருவர், ஏ 2சி எஸ் — ஒருவர்.

★ உயிரியல்: 2ஏ பி சி — இருவர், 2ஏ 2சி — ஒருவர், 2பி 2சி — ஒருவர், 2பி சி எஸ் — ஒருவர்.

★ வர்த்தகம்: 3ஏ பி — ஒருவர், 2ஏ பி சி — ஒருவர், ஏ பி 2சி — மூவர்.

★ கலை: 2ஏ பி சி — ஒருவர், ஏ பி சி எஸ் — ஒருவர்.

**வட்டு. இந்து**

★ கணிதம்; 3சி எஸ் — ஒருவர், சி 3எஸ் — ஒருவர்.

★ உயிரியல்: ஏ பி 2சி— ஒருவர், ஏ பி சி எஸ் — ஒருவர், 2பி 2சி — ஒருவர், 2பி சி — ஒருவர்.

★ வர்த்தகம்: 2ஏ பிசி — ஒருவர், ஏ 2பி சி — இருவர் — ஏ பி 2சி — ஒருவர்.

★ கலை: 2ஏ 2பி — இருவா, 2ஏ பி சி — இருவர். ஏ 3பி — ஒருவர், ஏ பி 2சி— ஒருவர்.

**சுழிபுரம் விக்ரோரியா**

★ கணிதம்: 3ஏ பி — ஒருவர், ஏ 2பி சி — ஒருவர்.

★ உயிரியல்: 2பி சி எஸ் — ஒருவர், 2 சி 2எஸ் — ஒருவர், 3சி எஸ் — ஒருவர்.

★ வர்த்தகம்: 2ஏ பி சி — ஒருவர், ஏ 3பி — ஒருவர், ஏ2பிசி — ஒருவர், 2பி2சி — ஒருவர், பி3சி — ஒருவர்.

★ கலை: 2ஏ2பி — இருவர், ஏ3பி — இருவர், ஏ2பிசி — ஒருவர், ஏபி2சி — இருவர்.

**சங்கானை சிவப்பிரகாச வித்.**

★ கலை: 2பி 2சி — ஒருவர், 2பி சி — ஒருவர், பி 3சி — ஒருவர், பி 2சி எஸ்— இருவர்.

**மானிப்பாய் இந்து**

★ வர்த்தகம்: 2ஏ 2பி — மூவர், ஏ 2பி சி — ஒருவர்.

★ கலை: ஏ 3பி—ஒருவர், ஏ 2பி சி — ஒருவர், ஏ பி 2சி — இருவர்.

**உரும்பிராய் இந்து**

★ வர்த்தகம்: ஏ 2பி சி — ஒருவர், 2பி 2சி — ஒருவர்.

★ கலை: ஏ 2பி சி — ஒருவர்.

**வசாவிளான் மத்தியமாகவித்.**

★ கலை: ஏ 2பி சி — ஒருவர், ஏ பி 2சி — ஒருவர், 4பி — ஒருவர், 3பி சி — ஒருவர்.

★ கணிதம்: பி 3சி — ஒருவர்.

★ உயிரியல்: பி சி 2 எஸ் — ஒருவர்.

★ வர்த்தகம்: ஏ பி 2சி — ஒருவர், ஏ 3சி — ஒருவர்.

**இளவாலை/சென். ஹென்றிஸ்**

கணிதம்: 2ஏ 2பி—இருவர் 4சி — ஒருவர்,

★ வர்த்தகம்: 3ஏ சி — ஒருவர், 2ஏ பி சி — ஒருவர் ஏ 2பி சி — ஒருவர், பி 3சி— ஒருவர், 4சி — ஒருவர்.

**நடேஸ்வரா கல்லூரி**

★ வர்த்தகம்: 4ஏ — ஒருவர் (எஸ். கஜேந்திரன்), 2ஏ பிசி — ஒருவர், ஏ 2பி சி— இருவர், 3பி சி — ஒருவர், பி 3சி — ஒருவர், 3சி எஸ்— ஒருவர்.

**தெல்லிப்பழை யூனியன் கல்லூரி**

★ உயிரியல்: ஏ 2 பி சி — ஒருவர், ஏ3சி — ஒருவர், 3பிஎஸ் — ஒருவர்.

★ வர்த்தகம்: 2ஏபிசி — மூவர், ஏ3பி — இருவர், ஏ 2பிசி — ஒருவர், ஏ பி 2 சி — ஒருவர், 2பி2சி — இருவர், 2பிசிஎஸ் — மூவர்.

★ கலை: 2ஏபிசி — ஒருவர், 2ஏசிஎஸ்— ஒருவர், ஏ 2பிசி - ஒருவர், ஏபி2சி — ஒருவர், ஏ3சி — ஒருவர், 4பி — இருவர், 3பிஎஸ் — இருவர். 2பி2சி — இருவர், 2பிசிஎஸ் — இருவர்.

**உடுவில் மகளிர் கல்லூரி**

★ கணிதம்: 2ஏ2பி — ஒருவர்.

★ மருத்துவம்: 2ஏ2பி — இருவர்.

★ வர்த்தகம்: 3ஏசி— ஒருவர், 2ஏ2பி— ஒருவர், ஏ3பி —நால்வர்.

★ கலை: 2ஏ2பி—ஒருவர். ஏ3பி — மூவர்.

**மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி**

★வர்த்தகம்: 2ஏ2பி— ஒருவர், ஏ2பிசி — மூவர், 2பி2சி —ஒருவர்.

★ கலை: 2ஏ2பி—ஒருவர், 2ஏபிசி — ஒருவர், ஏ3பி — ஒருவர், ஏ2பிசி — இருவர், ஏபிசிஎஸ் — ஒருவர், 3பிசி — 7பேர், 2பி2சி —இருவர்.

**இணுவில் இந்துக் கல்லூரி**

★ கலை: 2ஏ2பி — ஒருவர், ஏ3பி —ஒருவர், 2பி2சி — ஒருவர், ஏ2பி ஒருவர்

**இணுவில் மத்திய கல்லூரி**

★ வர்த்தகம்: 2 ஏ 2 பி— ஒருவர், 2ஏபிஎஸ் — ஒருவர், ஏ2பிசி — இருவர், ஏபி2சி— இருவர்.

★ கலை: 3பிசி— இருவர், பி3சி— ஒருவர்.

**அச்சுவேலி ம. வி.**

★ கலை: 2ஏபிசி — ஒருவர்.

★ வர்த்தகம்: 3பிசி — ஒருவர்.

**இடைக்காடு மகா வித்தியாலயம்**

★ கணிதம்: 3ஏசி —ஒருவர்.

★ கலை: ஏபி2சி —ஒருவர்.

★வர்த்தகம்: 2ஏ2பி— ஒருவர்.

**றிபேர்க் கல்லூரி**

★ வர்த்தகம்: 2ஏ2பி — ஒருவர், 2ஏபிசி — ஒருவர், ஏ2பிசி — ஒருவர், ஏபிசிஎஸ் — ஒருவர், பி3சி — இருவர்.

**சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

★ கலை: 2ஏ2பி — ஒருவர், ஏ3பி — இருவர், ஏ 2பிசி — ஒருவர், 2பி2சி— ஐவர், ஏ3சி — இருவர், பி3சி — 8 பேர்.

★ வர்த்தகம்: 2ஏ2பி — ஒருவர், ஏ2பிசி — ஒருவர், பி3சி — ஒருவர்.

★ உயிரியல்: பி 3 எஸ் — ஒருவர்.

**மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம. வி**

★ வர்த்தகம்: 4ஏ — ஒருவர் (இராசையா ஜனதன்), 3ஏபி — ஒருவர், ஏ2பிசி — ஒருவர், 2ஏபிசி — ஒருவர், 3பிசி — ஒருவர், பி3சி — ஒருவர்.

★ கலை: 2ஏ2சி — ஒருவர், ஏபிசிஎஸ் ஒருவர், ஏபி2சி — ஒருவர், 2பிசிஎஸ் — ஒருவர், பி3சி — இருவர்.

**சாவகச்சேரி இந்து**

★ கணிதம்: 4ஏ — ஒருவர் (சாமுவேல் துஷ்யந்தன்) 3ஏபி — இருவர், 2ஏபிசி — இருவர், ஏ2பிசி — இருவர்.

★ உயிரியல்: 3 ஏபி — ஒருவர். 2ஏ2சி — ஒருவர், ஏ2பிஎஸ் — ஒருவர், 3பிசி — ஒருவர், ஏபி2சி — இருவர், 3பிசி — ஒருவர் 2ஏபிசி — ஒருவர்.

★ வர்த்தகம்: 4ஏ — ஒருவர் (பா. இன்பகீதன்), 3ஏபி நால்வர், 2ஏபிசி — மூவர், 2ஏபிஎஸ் — ஒருவர், 2ஏ2சி — ஒருவர், 2ஏ2பி — ஒருவர், ஏ3பி — இருவர், ஏபி2சி — ஒருவர், ஏ2சிஎஸ் — இருவர், ஏபிசிஎஸ் — ஒருவர், 3பிஎஸ் — ஒருவர்.

★ கலை: 3ஏ பி - ஒருவர், ஏ பி 2 சி — மூவர், 3பி சி — இருவர், 4 பி — ஒருவர், 2 பி 2 சி — ஒருவர், ஏ 2 பி சி — மூவர், ஏ பி 2சி — ஒருவர், ஏ 2 பி சி — ஒருவர்.

**மீசாலை வீரசிங்கம்**

★ வர்த்தகம்: 4 ஏ — ஒருவர் (செல்வி தனபாலசிங்கம் சுகிர்ஜினி)

★ கலை: ஏ 2 பி சி — ஒருவர், ஏ பி 2சி — ஒருவர், 3 பி சி — ஒருவர், 2 பி 2 சி — இருவர், பி 3 சி — மூவர், 4 சி — ஒருவர்.

**புத்தூர் சோமஸ்கந்தா**

★ கலை: 3 ஏ பி — ஒருவர், 2ஏ 2 பி ஒருவர், 4 பி — ஒருவர், ஏ 2 பி எஸ் — ஒருவர், ஏ பி 2சி — ஒருவர், 3 பி சி — ஒருவர்.

★ வர்த்தகம்: 2 ஏ 2 பி— ஒருவர், 2 ஏ 2 சி — ஒருவர், ஏ 3 சி — ஒருவர்.

**பருத்தித்துறை வேலாயுதம் ம.வி**

★ வர்த்தகம்: 4 ஏ — ஒருவர் (நவரட்ணராஜா ஜெய கணேஸ்), 2 ஏ 2 பி — ஒருவர், 2 ஏ பி சி — இருவர், 3 ஏ பி — ஒருவர், 3 பி சி— ஒருவர், 3 பி எஸ் — ஒருவர்.

**வட. இந்து மகளிர் கல்லூரி**

★ வர்த்தகம்: 3 ஏ பி — இருவர், ஏ பி 2 சி — இருவர்

★ கணிதம்: ஏ 2 பி சி — ஒருவர்.

★ உயிரியல்: பி சி 2 எஸ் — ஒருவர்.

★ கலை: 4 பி — ஒருவர், 3 பி சி — ஒருவர், ஏ 2 பி சி — இருவர்.

**உடுத்துறை ம. வி**

★ கலை: 3 சி எஸ் — ஒருவர்.

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை**

★ வர்த்தகம்: 4 ஏ — இருவர் (செல்வி ஆழ்வாப்பிள்ளை கலைவாணி, செல்வி தங்கவேலாயுதம் துஷ்பந்தி), 2ஏ 2 பி — இருவர், 2 ஏ 2 சி — இருவர், ஏ 2 பி சி — ஒருவர். ஏ 3 பி — ஒருவர், 2 பி 2 சி — மூவர், ஏ பி 2 சி — ஒருவர்.

★ கணிதம்: 3 ஏ பி — ஒருவர், 3 ஏ சி — ஒருவர், ஏ பி 2 சி — ஒருவர், பி 2 சி எஸ் — ஒருவர்.

★ உயிரியல்: 2 ஏ பி சி — ஒருவர், ஏ 2 பி சி — ஒருவர், ஏ 2 சி எஸ் — ஒருவர், ஏ சி 2 எஸ் — ஒருவர்.

★ கலை: 2 ஏ2 பி — ஒருவர், 2ஏ பி சி — ஒருவர், 2 ஏ 2 பி — ஒருவர், 2 ஏ பி சி — மூவர், ஏ பி 2சி — ஒருவர், ஏ 2 பி சி — ஒருவர்.

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன்**

★ வர்த்தகம்: ஏ 2 பி சி— இருவர், ஏ பி 2சி — இருவர், 3 பி சி — ஒருவர்.

★ கலை: 3ஏ பி — ஒருவர், ஏ 2 பி சி — இருவர், ஏ பி 2 சி — இருவர்.

★ உயிரியல்: 2 ஏ பி சி — ஒருவர், ஏ 2 பி சி — இருவர்.

★ கணிதம்: 3ஏ பி — ஒருவர், ஏ பி 2 சி — மூவர், ஏ பி 2 சி — மூவர், ஏ பி 2 எஸ் — மூவர்.

**புற்றளை ம. வி**

★ கலை: 3 ஏ பி — ஒருவர், ஏ 3 பி — ஒருவர்.

**சிதம்பரா கல்லூரி**

★ வர்த்தகம்: 2 ஏ 2பி— ஒருவர், 3 பி சி — ஒருவர்

**வல்வை மகளிர்**

★ உயிரியல்: 2 பி 2 சி — ஒருவர்.

★ வர்த்தகம்: பி சி 2 எஸ் — ஒருவர்.

★ கலை: 3 சி எஸ் — ஒருவர்.

**நெல்லியடி ம. ம. வி**

★ வர்த்தகம்: 4 ஏ — ஒருவர் (புலேந்திரன் ஜெமில்குலம்), 3 ஏபி — ஒருவர், 4 பி — ஒருவர், 2ஏ பி சி — இருவர்.

★ கணிதம்: ஏ பி 2சி — ஒருவர், ஏ 2சி எஸ் — ஒருவர்.

★ உயிரியல்: 2ஏ 2சி — ஒருவர். ஏ 2பி சி — ஒருவர்,

★ கலை: 2ஏ 2பி — இருவர், 2ஏபிஎஸ் —ஒருவர்.

**கரவெட்டி விக்கினேஸ்வரா**

★ வர்த்தகம்: 3ஏசி — ஒருவர்.

★ கணிதம்: 2ஏபிசி — ஒருவர்.

★ கலை: ஏபி2சி— ஒருவர்.

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

★ வர்த்தகம்: 2 ஏ பி சி — ஒருவர், ஏ3பி — இருவர், 2ஏ 2சி — இருவர், ஏ 3 சி — இருவர்.

★ கலை: ஏ3சி — ஒருவர், ஏ3எஸ் — ஒருவர், பி3சி — ஒருவர், 2பி2சி — ஒருவர்.

**கட்டைவேலி ஞானாசிரியார்**

★ கலை: 3பிசி — இருவர்.

★ வர்த்தகம்: 2சி2எஸ்ஒருவர்.

**நெல்லியடி மத்தியமகளிர் கல்லூரி**

★ கலை: ஏ3பி — ஒருவர், ஏ3சி — ஒருவர், ஏ பி 2 சி — ஒருவர், பி3சி — ஐவர்.

★ வர்த்தகம: 3பிசி — ஒருவர், பி3சி — ஒருவர்.

பாடசாலைகளுக்குரிய

# இரசாயனப் பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 4 யாழ். மாவட்ட பாடசாலை ஆய்வு கூடங்களுக்கு தேவையான இரசாயனப் பொருள்களில் ஒரு பகுதி நீண்ட இடைவெளியின் பின் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுகின்றது.

யாழ். மாவட்ட பாடசாலைகளில் உள்ள ஆய்வு கூடங்களுக்குத் தேவையான இரசாயனப் பொருள்களை இங்கு எடுத்து வருவதற்கு இதுவரை காலமும் அனுமதி மறுக்கப்பட்டுவந்தது தெரிந்ததே.

ஓரிருதினங்களில் வடக்கே வந்து சேரும் 'மாஹோ' கப்பலில் ஆறுவகையான இரசாயனப் பொருள்களும் ஆய்வு கூட உபகரணங்களும் எடுத்து வரப்படுகின்றன.

இவை வந்து சேர்ந்ததும் பாடசாலைகளுக்கு பங்கிட்டு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## கல்விப் பிரிவுக்கு 'மிட்சுபிசி' பஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 4 யாழ். கல்வித் திணைக்களத்துக்கு ''மிட்சுபிசி'' ரக பஸ் ஒன்று அடுத்த வாரம் வந்து சேரவுள்ளது.

கல்வி அமைச்சால் வழங்கப்பட்டுள்ள இந்த பஸ், கல்வி அதிகாரிகள் குழுவாக பாடசாலைகளுக்கு திடீர் சோதனைகளுக்கு செல்வதற்கும் மற்றும் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படவிருப்பதாகத் தெரிகின்றது.

கப்பல் மூலம் இந்த பஸ் எடுத்து வரப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# ஸ்ரீ வீரகத்திவிநாயகர் கைலாயவாகன வெள்ளோட்ட விழா

(தொடர்ச்சி)

## கைலையின்...

தனது வலிமை பொருந்திய தோள்களினாலே தூக்கி வீச முற்பட்டான். சாமகானப் பிரியனாகிய சிவபெருமான், இராவணனுடைய கர்வத்தை அடக்க எண்ணினனாய், தன் கால் பெருவிரலால் மலையை அழுத்தி, அவனை நசுங்கச் செய்தார். அதேவேளை, அங்கு தோன்றிய வாகீச முனிவரின் ஆணைப்படி சாமகானம் பாடவிளைந்த பொழுது வீணை இல்லாது போகவே உடனே தன் ஒரு தலையையும் ஒரு கையையும் ஒடித்து இரண்டையும் இணைத்து வீணையாக்கி, நரம்புகளை நாதத் தந்திகளாக்கி சாமகானம் பாடி, இறைவனை இசையிலே மெய்மறக்கச் செய்து கைலாய மலை என அறியாது தான் செய்த தவறை மன்னிக்கக் கோரி இறைவனின்கைலாயக்காட்சியைக் கண்டு அருள் பெற்றான்.

புராண வரலாறு கொண்டதும், புண்ணிய காட்சியுமான கைலாயக் காட்சியை நம் கண் முன்னே கைலாய வாகனமாக உருவாக்கியவர்கள் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பலலய ஸ்தபதி சிற்பகலா விற்பன்னர் விஸ்வபிரம்மஸ்ரீ ஆ ஜீவரத்தினமும் அவரது சக சிற்பாசாரியர்களும் ஆவர். குறுகிய காலத்தில், மிகவும் அழகாக சிற்பக்கலை நுணுக்கங்களுடன் இதனை உருவாக்கியது பாராட்டுக்குரியதாகும்.

இவர்களின் பணி மென்மேலும் வளர்ச்சியடைந்து சிறப்புற, கைலாய வாகனத்தில் வலம் வரும் கைலாய கணபதியின் கருணை கிடைக்கப் பிரார்த்தித்து நாமும் வாழ்த்துகின்றோம்.

ஆலயத்தின் திருப்பணி வேலைகள் யாவும், விநாயக அடியார்களின் அளப்பரிய பேருதவியினாலும், அயாராத ஊக்கத்தினாலும் சிறப்புற நிறைவேறி வருகின்றன. எல்லா மக்களுடைய விக்கினங்களையும், விரைவிலேயே நீங்கி, சகல நலன்களும், வளங்களும் பெற்று பேரானந்தப் பெரு வாழ்வு வாழ வீர்கத்தி விநாயகரைப் பிரார்த்திப்போமாக. ★

## அழகொழுகும்...

எடுத்துக்காட்டுகின்றது.

ஆறுமுகம் சிற்பாலய அதிபர் அவர்களுக்கும் அவரது குழுவினர்களுக்கும் தமிழ்ச் சமூகம் என்றும் கடமைப்பட்டது. சிறப்பான, அழகான தனித்துவமான சிற்பக் கலைக்கோலங்களைச் செதுக்கிக் காட்டும் ஆறுமுகம் சிற்பாலயத்தினர்க்கும் அக்கலைக் கோயிலின் அதிபர் சிற்பச் சக்கரவர்த்தி ஆ. ஜீவரத்தினம் அவர்களுக்கும் எல்லாம் வல்ல பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்திவிநாயகர் நல்லருள் பாலிக்க வேண்டுமென்று பிரார்த்திப்போமாக ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

## எது சரி?

வடக்கு — கிழக்கில் நடைபெறும் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்குக் கால அட்டவணை எதுவும் வகுக்கப்படவில்லை; காலக்கெடுவும் விதிக்கப்படவில்லை — என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்த தெரிவித்திருக்கிறார். போரை முடிப்பதற்குக் காலக்கெடு ஒன்றை விதிப்பதற்குத் தாம் விரும்பவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இராணுவத் தளபதியின் இந்தத் தகவல், போர் இப்போதைக்கு முடிந்து போகும் சாத்தியம் இல்லை; அது கால வரையறை எதுவுமின்றித் தொடரவே போகின்றது என்ற எண்ணத்தையே எவருக்கும் தரும்.

அரசுத் தலைவரான ஜனாதிபதி, இந்த வருட இறுதிக்குள் போர் முடிந்துவிடும் என்றும், அதன் பின்னர் சமாதானமும் அமைதியும் நிலைநாட்டப்பட்டு விடும் என்றும் அடிக்கடி கூறி வந்தார். இப்போது நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல் கூட்டங்களிலும் கூறி வருகிறார்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டு, சமாதானத்தையும் அமைதியையும் உருவாக்கி, போரை நிறுத்தப் போவதாக தேர்தல் வாக்குறுதி வழங்கியே ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா பெரு வெற்றி ஈட்டினார்.

எனினும் பின்னர், போரினூடாகச் சமாதானம் என்ற புதிய கோட்பாடு கையில் எடுக்கப்பட்டு வடக்கு — கிழக்கில் போர் தீவிரமடைந்தது; தொடரப்படுகிறது,

போரைத் தீவிரப்படுத்திய சில மாத இடைவெளியில் அரசாங்கம் இனப் பிரச்சினைக்கான தனது தீர்வுப் பொதியை முன்வைத்தது, போரினூடாக சமாதானத்தை நிலைநாட்டும் அதேவேளை அரசியல் தீர்வு-அதிகாரப்பரவலாக்கல் திட்ட அரசியல் பொதி — நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி சமீப காலமாக பொதுக் கூட்டங்களில் பேசும் போதெல்லாம், 1997 ஆம் வருட இறுதிக்குள் போர் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்று அடித்துச் சொல்லி வந்தார், அதிகாரப் பரவலாக்கல் பொதியை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்ற முடியாவிட்டால், ''அரசமைப்புப் புரட்சி''செய்து அதனை நிறைவேற்ற இருப்பதாகவும் கூறினார்.

ஆகையால், ஜனாதிபதியின் கருத்துக்கும் — திட்டத்துக்கும் — இராணுவத் தளபதியின் தகவலுக்கும் இடையே நூறு வீதம் முரண்பாடு உண்டு. இவர்களில் யார் சொல்வது சரி? அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாடு என்ன?

போரை முடித்துக் கொண்டு தான் அரசியல் தீர்வு கொண்டுவரப்படும் என்றால் —

போர் காலவரையன்றி நடத்தப்படுமானால் —

சமாதானத்தையோ அமைதியையோ இப்போதைக்குக் காணமுடியாது என்பதே அர்த்தமாகும்.

இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

போரினால் பாதிக்கப்பட்டு வாழ்க்கையில் விரக்தியுற்று இருக்கும் தமிழ் மக்களுக்கு இப்போதைக்கு விடிவு இல்லை என்று கோடி காட்டுவதாகவே இராணுவத் தளபதியின் தகவல் உள்ளது. தமிழர்கள் மீண்டும் ஏமாறுவது தான் நியதியா?

---

காணாமற் போனோர் விவகாரம்:

## மீண்டும் வடக்குக்கு ஆணைக்குழு விஜயம்

கொழும்பு, மார்ச் 4

யாழ். மாவட்டத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பாக கடந்த மாதம் 18 ஆம் திகதி வடக்கே வந்து விசாரணை நடத்தியிருந்த ஜனாதிபதி ஆணைக்குழு மீண்டும் இது தொடர்பான விசாரணையைமேற்கொள்ள வடக்குக்கு வரவிருப்பதாக அக் குழுவின் அங்கத்தவர் ஒருவர் தெரிவித்து உள்ளார்.

பாதுகாப்புப் படையினர் யாழ். மாவட்டத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததன் பின்னர் 650 பேர் வரை காணாமற் போயிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் —

வடக்கே சென்று விசாரணை மேற்கொண்ட போது, யாழ். அரசாங்க அதிபரால் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்தவர்களில் 57 பேர் சாட்சியமளிக்க சமுகமளித்திருந்தனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

பெருமளவு சாட்சியங்கள் தமிழ் மொழியிலேயே பதிவு செய்யப்பட்டமையினால் இச் சாட்சியங்களை மொழி பெயர்ப்பதில் கால தாமதம் ஏற்பட்டதாக அறியவருகிறது.

மேற்படி விசாரணைக் குழு தனது இடைக்கால அறிக்கையை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பித்து உள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் பந்துல குலதுங்கவே இக்குழுவின் தலைவராவார். மேஜர் ஜெனரல் அசோக டி சில்வா, ஏயர்,கொமடோர் அஞ்சலம் பீரிஸ் ரியர் அட்மிரல் தஸநாயக்க, பிரதி பொலீஸ் மா அதிபர் பி. பி. திஸநாயக்கா ஆகியோர் ஆணைக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களாவர். (உ-5)

ஊர்காவற்றுறை

## அன்ரனீஸ் கல்லூரி இயங்க ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

ஏழுவருடங்களின் பின்னர் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி புனரமைக்கப்பட்டு மீண்டும் நேற்று முதல் இயங்க ஆரம்பித்தது.

நேற்று ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் தேவாலயத்தில் நடந்த விசேட பூசையையடுத்து கல்லூரி அதிபர் கே. இரத்தினசிங்கம் கல்லூரிக் கொடியை ஏற்றி கல்லூரியின் ஆரம்ப வைபவத்தைத் தொடக்கி வைத்தார்.

இக்கல்லூரியின் மூன்று வகுப்புக்கள புனரமைக்கப்பட்டு நேற்று சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த வைபவத்தில் கல்லூரி முன்னாள் அதிபர் எஸ். இரத்தினராசா, வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா, இராணுவத்தின் 514 ஆவது பிரிகேட் கொமாண்டர் கேணல் டி. பி. எஸ். மெண்டிஸ் ஆகியோர் உரையாற்றினார்கள. (உ-3)

## கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் நெல்லியடியில் சடலம் மீட்பு!

வடமராட்சி, மார்ச் 4

ஆட்கள் இல்லாத வீடு ஒன்றில் சுமார் 40 வயது மதிக்கத்தக்க நபரொருவர் கயிற்றால் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

நெல்லியடியில் நெல்லியடி — கொடிகாமம் வீதியில் முதலாவது வளைவுக்கு அண்மையில் உள்ள வீடொன்றின் அறையில் இச்சடலம் கயிற்றில் தொங்கியவாறு காணப்பட்டது.

பொலீஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதை அடுத்து பொலீஸார் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டனர்.

அடையாளம் காண்பதற்காகவும், மேல்விசாரணைகளுக்காகவும் சடலம் மந்திகை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-173-15)

அ'புரம் நீதிமன்றத்தில்

## விடுதலையான 23பேர் வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச். 4

யாழ். குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் படையினரால் கைது செய்யப்பட்டு மகஸீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 2 பெண்கள் உட்பட 23 பேர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கடந்த 26ஆம் திகதி அநுராதபுரம் நீதிவானால் விடுதலை செய்யப்பட்ட இவர்கள் திருமலையில் இருந்து வந்த கப்பலில் நேற்றுக் காலை காங்கேசன் துறையை வந்தடைந்தனர்.

காங்கேசன் துறையில் வைத்து அவர்களைப்பொறுப்பேற்ற ஈ. பி. டி. பி. யின் யாழ். அலுவலகத்தினர் அங்கிருந்து அவர்களை அழைத்து வந்து யாழ். நகரில் உள்ள அலுவலகத்தில் வைத்து அவர்களின் உறவினர்களிடம் கையளித்தனர்.

விடுதலையானவர்களில் ஒரு தொகுதியினர் நேற்றே அவர்களது உறவினர்களால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இன்னமும் தமது அலுவலகத்தில் உள்ளவர்களை இன்று வந்து பொறுப்பேற்குமாறு அவர்களது உறவினர்களை ஈ. பி. டி. பி.யின் யாழ் அலுவலகத்தினர் கேட்டுள்ளனர்.

விடுதலையானவர்களுக்கு உடுபுடைவைகளையும் மற்றும் பொருள்களையும் ஈ. பி. டி. பி. கட்சி வழங்கியது. (உ-3)

### நாளை

மாசி 22

புதன்கிழமை

திதி: ஏகாதசி மாலை 4-59 வரை.

நட்சத்திரம்: உத்தராடம் பின்இரவு 4.33 வரை.

ஏகாதசி விரதம்

ராகுகாலம்: 12.26-1.56

சுபநேரம்: 4.56-6.26

(பகலுக்கும் இரவுக்கும் பஞ்சாங்க நேரப்படி)

---

## வேலணைப்பகுதிக்கு தொலைபேசி வசதி

வேலணைத் தபாலகத்துக்குத் தொலைபேசி வசதி நேற்று வழங்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டுக்குப் பின் அப்பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த வசதியின் காரணமாக, அங்கிருந்து வெளியூர்களுக்கான தொலைபேசி இணைப்பைப் பெற முடியும்.

இதேசமயம் தீவுப்பகுதி மக்கள வேலணை தபாலகத்திலிருந்து யாழ். நகருக்கான தொலைபேசி அழைப்பை இலவசமாகப் பெற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜூன் மாதத்தில் வேலணைக்கு சர்வதேச தொலைபேசி வசதி கிடைக்கும் என்று இராணுவத்தின் 514(27) பிரிகேட் கொமாண்டர் கேணல் டி. பி. எஸ். மெண்டிஸ் தெரிவித்தார். (உ-3)

## யுத்தத்துக்கு முடிவு வருட இறுதிக்குள்!

### ஜனாதிபதி சூளுரை!!

நாட்டில் இடம்பெறும் கொடூர யுத்தத்துக்கு இவ்வாண்டு முடிவதற்குள் முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு சூளுரைத்திருக்கிறார்.

பதுளை பெப்பிட்டி கொல மைதானத்தில் இடம் பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதியின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட உரை ஒலிபரப்பப்பட்டது. அந்த உரையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மோசமான காலநிலையை அடுத்து முன்னரே செய்திருந்த ஏற்பாட்டின்படி ஜனாதிபதி அக்கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாமற் போனது என்று அங்கு அறிவிக்கப்பட்டது, ஒலிப்பதிவு செய்யப்பட்ட உரை மட்டுமே அங்கு ஒலிபரப்பப்பட்டது.

நாட்டில் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கும் பல அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் பல லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும் என்றும் — ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். (ஐ-3-150)

## கொள்ளையரின் தாக்குதலுக்கு பஸ் பயணிகள் இருவர் பலி!

### கதிர்காமத்தில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 4

கொழும்புக்கும் கதிர்காமத்துக்கும் இடையே சேவையில் ஈடுபட்டிருந்த சொகுசு பஸ் ஒன்றை செல்வத்தை என்னுமிடத்தில் கொள்ளையர்கள் வழிமறித்து பயணிகளைத் தாக்கியுள்ளனர்.

இச் சம்பவத்தில் பயணிகள் இருவர் கொல்லப்பட்டனர். ஏழு பேர் காயமடைந்தனர்.

பஸ்ஸை வழிமறித்த கொள்ளையர்கள் பயணிகளின் உடைமைகளைச் சூறையாட முயன்ற சமயம் பயணிகளுக்கும் அவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

அதனையடுத்து கொள்ளையர்கள் பயணிகள் மீது கைக்குண்டுகளை வீசிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். (ஐ-5)

## அ' புரம் நீதிமன்றில் 8 யாழ். யுவதிகள் ஆஜர்

### மூவர் விடுவிப்பு, ஐவருக்கு பிணை

யாழ். மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட 8 இளம் பெண்கள் கடந்த 26 ஆம் திகதி அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களில் மூவர் விடுவிக்கப்பட்டனர்; எண்மர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சிவராசா கலைமகள் (கைதடி,நாவற்குழி),மாணிக்கம் புஸ்பராணி(மணல்தறை, உடுப்பிட்டி), சண்முகசாமி ரோகினி (மல்லாகம்) ஆகிய மூவருமே விடுதலை செய்யப்பட்டனர்.

தியாகராசா கிரிஜா (கைதடி, நாவற்குழி), நல்லையா தேவராணி (கட்டப்பிராய், கோப்பாய்) வல்லிபுரம் சுவர்ணலதா (மட்டுவில்), உதயமாலா தச்சன் தோப்பு), சிதம்பரப்பிள்ளை சரவண ராஜினி (கோயிலாக்கண்டி) ஆகிய ஐவரும் 7 ஆயிரத்து 500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். மீண்டும் அடுத்த மாதம் 7 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அவர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

கடந்த நவம்பர் மாதம் யாழ். மாவட்டத்தில் கைதான 5 இளம் பெண்கள் வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் —

டிசம்பர் மாதம் கைதான 5 பெண்கள் அநுராதபுரம் சிறைச்சாலையிலும் —

உள்ளனர் என்று விடுதலையாகி நேற்று யாழ் வந்து சேர்ந்தோர் தெரிவித்தனர். (உ-3)

## மெய்வல்லுநர் போட்டி

கொக்குவில் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் கல்லூரி மைதானத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளன. (ஐ-10)

## கணக்காய்வு பயிற்சி வகுப்பு

முதனிலைக் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வை மேற்கொள்ளும் உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளர்களுக்கான பயிற்சி வகுப்பு யாழ். கோயில் வீதியில் உள்ள கூட்டுறவுத் திணைக்கள அலுவலகத்தில் நாளை காலை 10 மணி முதல் நடைபெறவுள்ளது. (ஐ-30)

## பதவியேற்பு

யாழ்ப்பாணம். மார்ச் 4

வடமாகாண பிரதி அஞ்சல் அதிபதி நாயகமாக திரு. து. வைத்திலிங்கம் பதவியேற்றுள்ளார்.

கடந்த 95 ஆம் ஆண்டு மே மாதம் முதல் வெற்றிடமாக இருந்த இந்தப்பதவிக்குத் தற்சமயம் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் யாழ். செயலக மேலதிக அரச அதிபராக இவர் பணியாற்றி வந்தார். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தானில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வந்து கொண்டிருந்த மற்றொரு ரயிலுடன் மோதுவதைத் தவிர்ப்பதற்காக— இந்தரயிலை வேறுபாதைக்கு மாற்ற அவசர முயற்சிஎடுக்கப்பட்டவேளை ரயில் தடம் புரண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து நடந்த இடத்துக்கு பிரதமர் நவாஸ் ஷெரீப் உடன் விரைந்து சென்று நிலைமையைப் பார்வையிட்டார். (ஐ)


யா/ இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

### பாராட்டுகின்றோம்

க. பொ. த. உயர்தரம் 1996 ஆம் ஆண்டில் நடைபெற்ற பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வர்த்தகம்**

| | |
|---|---|
| 2 ஏ 2 பி | சிவஞானசுந்தரம் கலைச்செல்வி |
| ஏ 2 பி சி | குணசிங்கம் நவநீதா |
| | சுதர்ஜினி வைரப்பிள்ளை |
| | உமாதேவி தியாகராஜா |
| ஏ பி சி எஸ் | சுதா தங்கராஜா |

**கலைப்பிரிவு**

| | |
|---|---|
| 2 ஏ பி சி | கம்சினி சொக்கையா |
| 2 ஏ 2 சி | விஜயலதா ஐயம்பிள்ளை |
| ஏ 3 பி | சுசீலா கந்தசாமி |
| ஏ பி 2 சி | மதிவதனி சின்னத்துரை |
| | அகிலா கனகரட்னம் |

3 பி சி — நால்வர் 2 பி சி எஸ் — மூவர்
2 பி 2 சி — ஐவர் பி 2 சி எஸ் — மூவர்
பி 3 சி — இருவர்

தோற்றியோர் - 48 பேர்
பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதிபெற்றோர் - 39 பேர்

பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(சி/235)



## யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

1996 க. பொ. த. உயர்தரப் பரீட்சையில்
கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கலைத்துறைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற

### மாணவர்களை வாழ்த்துகின்றோம்

| கணிதம்: | | மா.நிலை |
|---|---|---|
| 1. பா. மயூரன் | 2 ஏ 2பி | 17 |
| 2. இ. சசிக்குமார் | 3 பி சி | 59 |
| 3. சி. கிருசாந்தினி | 3 பி சி | 67 |
| 4. து. ஜெயக்கிருஷ்ணன் | 2 பி 2சி | 84 |
| 5. த. சஞ்சீவன் | 3 பி சி | 91 |
| 6. க. பிரதாபன் | 2 பி 2சி | 108 |
| 7. சோ. ரவீந்திரன் | 2 பி 2சி | 111 |
| 8. க. சிவகுமார் | 2 பி 2சி | 121 |
| **உயிரியல்:** | | |
| 1. ச.மருதாசலமூர்த்தி | 3 ஏ சி | 3 |
| 2. சு. சுதர்சினி | ஏ 3சி | 176 |
| **வர்த்தகம்:** | | |
| 1. சி. ஜெயகாந் | 4 ஏ | 2 |
| 2. கா. சசிகரன் | 3 ஏ பி | 15 |
| 3. த. உமேஸ் | 3 ஏ சி | 46 |
| 4. செ. சுரேஜினி | 2 ஏ பி சி | 74 |
| 5. தி. தயாளினி | 2 ஏ 2பி | 82 |
| 6. அ. ஜெயதீபன் | 3 ஏ சி | 90 |
| 7. சோ. ரஜனி | 2 ஏ பி சி | 120 |
| 8. ச. சபேசினி | ஏ 3 பி | 126 |
| 9. ம. கோபிகா | 2 ஏ பி சி | 130 |
| 10. தி. இராஜகுமார் | 3 ஏ எஸ் | 185 |
| **கலை:** | | |
| 1. சி. சிவதர்சினி | 2 ஏ 2பி | 37 |
| 2. சு. சுதர்சினி | 2 ஏ 2பி | 49 |
| 3. சி. சிவநேசன் | 2 ஏ பி சி | 49 |
| 4, இ. சுதர்சினி | ஏ 3பி | 71 |
| 5. சு. கலைவாணி | ஏ 2பி சி | 81 |
| 6. சா. பிரதீபா | ஏ 2பி சி | 137 |
| 7. ச. பத்மநேசன் | 4பி | 122 |
| 8. சொ. சுகந்தினி | ஏ 2பி சி | 137 |
| 9. ஜெ. சுபாசினி | ஏ 2பி சி | 147 |
| 10, க. சசிகலா | ஏ 2பி எஸ் | 153 |
| 11. ச. சந்திரகாசன் | ஏ பி 2சி | 153 |

நல்ல பெறுபேறுகளைப் பெற்று எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மேற்படி மாணவர்களையும் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்ற **148** மாணவர்களையும் இப் பெறுபேறுகளை அடைய அயராது உழைத்த அதிபர், ஆசிரியர்களையும் மனமாரப் பாராட்டுகின்றோம்.

பெற்றோர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி/233)


# மன்னாரில் கைப்பற்றிய பகுதிகளில் பொலிஸ் நிலையங்கள் அமைப்பு

கொழும்பு, மார்ச் 4

படையினரின் கட்டுப்பாட்டில் தற்சமயம் உள்ள வவுனியா — மன்னார் வீதியும், வவுனியா — மதவாச்சி வீதியும் சந்திக்கும் பறையனாளங்குளம் சந்தியில் இராணுவ — பொலிஸ் கூட்டுச் சோதனை முகாம் ஒன்றை அமைக்க படையினர் முடிவு செய்துள்ளனர்.

இந்த முகாமுக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி டி சில்வா பொறுப்பாக நியமிக்கப்படவிருக்கிறார்.

இதேவேளை —

முருங்கன், மடுச்சந்தி ஆகிய இடங்களில் பொலிஸ் நிலையங்களை அமைக்கவும் படையினர் முடிவு செய்துள்ளனர். (ஐ-3-150)

## ஜப்பானில் சுற்றுலா

கொழும்பு, மார்ச் 4

கடந்த ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்ற எட்டு மாணவர்கள் ஜப்பானில் சுற்றுலாவுக்குச் செல்லவுள்ளனர்.

## ஓகஸ்ட்டுக்கு ..

(முதலாம் பக்கத் தொடர்)

முகாமையாளர் வாமதேவா மற்றும் தொலைத்தொடர்பு திணைக்கள உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய முக்கிய முடிவுகள் வருமாறு:-

★ யாழ். கோட்டை, சுப்பிரமணியம் பூங்கா ஆகிய இடங்களில் தொலைத்தொடர்பு கோபுரங்களை அமைத்தல்.

★ வெளிநாட்டு தொலைபேசிச் சேவையை விரிவுபடுத்த மேலும் ஒரு வெளிநாட்டு தொலைபேசி வசதியை யாழ்ப்பாணத்துக்கு ஏற்படுத்தல்.

யாழ். மாவட்டத்தில் 300 தொலைபேசி இணைப்புக்களை வழங்க அமெரிக்காவின் 'மோட்டோராலா', பிரான்ஸில் உள்ள அலெக்ரெயிலர்' ஆகிய கம்பனிகள் முன்வந்துள்ளதாக இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்)

றும் —

மீண்டும் சொற்ப காலத்தில் அவர்களை அழைத்து அவர்களுக்கு மேலும் 6 மாத காலப் பயிற்சி அளிப்பது என்றும்—

கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக அறியவந்தது. (உ-3-150)

## நுவரெலியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

லூரியில் ஆண்டு — 10 வகுப்பில் கல்வி பயின்று வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்த பொலீஸார் இதுவரை இருவரைக் கைது செய்துள்ளனர். குண்டு வெடித்த இடத்தில் இருந்து தப்பியோடியதாகக் கூறப்படும் மற்றொரு இளைஞனைப் பொலீஸார் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சியா இது என்பது குறித்து தெளிவாகத் தெரியவில்லை.

எனினும் ஜனாதிபதி திட்டமிட்டபடி தமது பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றினார் என ஒரு செய்தி தெரிவித்தது.

இதற்கிடையில் நுவரெலியா குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து இலங்கை வானொலி வெளியிட்ட செய்தியில் —

பம்பரஹல பகுதியில் கைக்குண்டு ஒன்று வெடித்ததில் பாடசாலை மாணவி ஒருவர் பலியானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நுவரெலியா புனித சேவியர் கல்லூரியைச் சேர்ந்த 11 வயது மாணவி ஒருவர், பாலம் ஒன்றுக்கு அருகிலிருந்து தாம் கண்டெடுத்த கைக்குண்டு ஒன்றை கையாள முற்பட்ட போது அது வெடித்து உயிரிழந்தார் என்றும் அச்செய்தி தெரிவித்தது. (உ-ஐ-5-10)

## வவுனியா-கிளிநொச்சி வீதியில் புதிய தாக்குதலை எதிர்கொள்ள புலிகள் தயாராகின்றனர்

கொழும்பு, மார்ச் 4

எழுபது கிலோ மீற்றர் நீள வவுனியா—கிளிநொச்சி பாதையின் இருமருங்கிலும் தமது நிலைகளைப் பலப்படுத்தும் பணியில் விடுதலைப் புலிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது என்று 'சண்டே லீடர்' ஆங்கில வார இதழ் தெரிவித்திருக்கின்றது.

படையினரின் புதிய தாக்குதல் நடவடிக்கைகளை முறியடிப்பதற்காகவே புலிகள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர் எனக்கூறப்பட்டது.

இந்தப் பாதையின் இரு மருங்கிலும் காடுகள் நிறைந்துள்ளதால், இப்பாதையை கஷ்டம் ஏதும் இன்றிப் புலிகளால் தக்க வைக்கமுடியும் என்று கூறப்படுகிறது.

இப் பகுதியில் புலிகளுடன் யுத்தம் புரியும் போது அது படையினருக்கு சோதனை நிறைந்ததாக அமையலாம். அங்கு புலிகளுக்குச் சாதகமான நிலை காணப்படுவதற்குக் காரணம், தரை நிலைவரம் படையினருக்குப் பழக்கமில்லாமல் இருப்பதேயாகும்.—என்று அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ-3-150)

## படுகாயம்

யாழ்ப்பாணம். மார்ச் 4

கச்சேரி நல்லூர் வீதியில் றெயில்வே சந்தியில் நேற்று இடம்பெற்ற மினிபஸ், சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நல்லூர் ஆசீர்வாதப்பர் வீதியைச் சேர்ந்த சுண்டுக்குளி மகளிர்கல்லூரி மாணவியான இரத்தினசபாபதி பவிதா (வயது 16) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

நினைவிழந்த நிலையில் இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இறக்கும் பணி ஆரம்பம்

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் கடந்த 5 நாள் இடைவெளிக்குப்பின் நேற்று மீண்டும் ஆரம்பமாயின.

கடந்த வெள்ளியன்று மாலை துறைமுகத்தை வந்தடைந்த ''வாதுவ'' கப்பலில் இருந்து தற்சமயம் பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன. (ஐ-173)

## பறையனாளங்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)

விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் கொல்லப்பட்டதாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

'எடிபல' இராணுவ நடவடிக்கை மூலம் அண்மையில் தாம் கைப்பற்றிய வவுனியா — மன்னார் வீதியில் பறையனாளங்குளம் பகுதியில் முக்கிய சோதனை முகாமைப் படையினர் அமைத்திருப்பது தெரிந்ததே.

இதற்கிடையில் —

கடந்த புதனன்று பறையனாளங்குளம் சந்தியில் பொலீஸாரின் காவலரண் ஒன்றின் மீது புலிகள் சினைப்பர் தாக்குதல் நடத்தியதில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். (உ-ஐ-150)


### பாராட்டுகின்றோம் வாழ்த்துகின்றோம்

யா/ இடைக்காடு மகாவித்தியாலயம்
க.பொ.த.(உ/த) பரீட்சைப் பெறுபேறு 1996

பரீட்சைக்குத் தோற்றியோர் - 44 பேர்
பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்றோர் - 30 பேர்

| கணிதம்: | | மா.நிலை |
|---|---|---|
| த. ஜெயந்தன் | 3 ஏ சி | 2 |
| செ. இரத்தினவேல் | 2 ஏ பி எஸ் | 63 |
| அ. சுரேந்திரராஜ் | ஏ 2 சி எஸ் | |
| தனுஜா | பி 3 சி | |
| வ. பிறேம்குமார் | பி சி 2 எஸ் | |
| கேசவன் | 3 சி எஸ் | |
| **வர்த்தகம்:** | | |
| க. வாகீஸ்வரி | 2 ஏ 2 பி | |
| தவரூபன் | ஏ 2 பி சி | |
| ர. தீபா | ஏ 2 பி சி | |
| வே. சித்திரா | பி 3 சி | |
| **கலை:** | | |
| வ. சிவலட்சுமி | ஏ பி 2 சி | |
| க. காவேரி | ஏ பி 2 சி | |
| ஆர். சதீஸ்வரி | ஏ பி 2 சி | |
| என். சுதானி | ஏ பி சி எஸ் | |
| கே. சுதா | ஏ 3 சி | |
| த. கௌசலாதேவி | ஏ 2 சி எஸ் | |
| இ. கஸ்தூரி | பி 3 சி | |

கஷ்டமான சூழ்நிலையிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும் ஊக்கமளித்த பாடசாலை ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம், வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர்கள், பெற்றோர்கள்.

(45620)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04 - 03 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org